www.padippakam.com



# புதிய ஜனநாயகம்

1—15 ஜனவரி' 88

3-4

விலை ரூ: 1

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு


# ஒரு பாசிஸ்டின் மரணம்:

## பத்திரிக்கைகள்- ஓட்டுக்கட்சிகளின் பித்தலாட்டம் நீலிக்கண்ணீர்!

படிப்பகம்

www.padippakam.com



# அரசியல் சக்தியாக எழ அறைகூவல் விடுக்கும் நான்காவது பிளீனம்

1981 செப்டம்பரில்நடைபெற்ற மூன்றாவது பிளீனத்திற்குப் பின் பெற்ற அனுபவங்கள், படிப்பினைகளின் ஒளியில் அமைப்பை மேலும் ஓர் உயர்ந்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வதில் முக்கியத்துவம் வாய்ந்த மாநில அமைப்புக் கமிட்டி, இந்திய பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட்)யின் நான்காவது பிளீனம் 1987ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் தேதி இரவு தியாகி பச்சையப்பன் அரங்கில் உற்சாகத்துடன் தொடங்கியது. முழுநேரத் தோழர்கள் மட்டுமில்லாது, அணிகள் மத்தியிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். முதலில் பிளீனத்திற்கான தலைமைக் கமிட்டி தோழர்களும் கூட்டப் பதிவாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதன்பின்தியாகிகளுக்குவீரவணக்கம் செலுத்தப்பட்டது.

அடுத்து, மூன்றாவது பிளீனத்திற்குப் பின் நடந்தேறிய மொத்த அமைப்பின் செயல்பாடுகள், அனுபவங்கள், படிப்பினைகளைத் தொகுத்து தலைமைக் கமிட்டியால் முன்வைக்கப்பட்ட அரசியல்—அமைப்பு அறிக்கை மீதான விவாதம் எடுத்துக் கொள்ளப்பட்டது. பிரதிநிதிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்ட இந்த விவாதம்உயிரோட்டமானதாக இருந்தது. விவாதத்தின் முடிவில் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட ஆக்கபூர்வமான விமர்சனங்கள், ஆலோசனைகளை மாநில அமைப்புக் கமிட்டி ஏற்றுக் கொண்டது. இந்த அடிப்படையில் மா.அ.க முன்வைத்த அரசியல் அமைப்பு அறிக்கை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆறு ஆண்டுகால இடைவெளியில் மொத்த அமைப்பும் புரட்சியின் திசைவழியில் முன்னேறியிருந்தது—வளர்ந்திருந்தது என்பதை எடுத்துக் காட்டுவதாக அறிக்கை இருந்தது. இரு பத்திரிகைகளை அரசியல் வீச்சுடன் நடத்திவருவது, இரு மக்கள் திரள் அமைப்புகளைக் கட்டி வளர்த்திருப்பது, கட்சியைக் கட்டுவதில் புதிய முறைகளை வளர்த்து முன்னேறியிருப்பது, ஐக்கியத்திற்காக எடுத்துக் கொண்ட பாரதூரமான — விடாப்பிடியான முயற்சிகள், அதனால் ஏற்பட்ட பலன்கள், மொத்த அமைப்பும்பெற்றிருந்த செழுமையான அனுபவங்கள் நம்பிக்கையை ஊட்டுவதாக இருந்தன. அமைப்பின் வளர்ச்சி அடுத்த கட்ட முன்னேற்றத்திற்கு படி அமைத்திருப்பதையும் அறிக்கை உணர்த்தியது. மூன்றாவது பிளீனத்தில் எடுத்த அரசியல்கோட்பாட்டு முடிவுகள் எவ்வளவு சரியானவை என்பதை நிரூபிப்பதாக அமைப்பின் அனுபவங்கள் இருந்தன.

அதே வேளையில், அமைப்பில் தென்படுகின்ற சோர்வு, முன்முயற்சியின்மை, சுயதிருப்தி, அலுவலர் பாணியிலான வேலைமுறை, தலைமைக்கு கட்டுப்பட மறுப்பது, திருமணம்—குடும்ப வாழ்க்கை போன்றவைகளில் உள்ள ஏகாதிபத்திய மற்றும் உதிரிப் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் போக்குகள், தலைமையிடம் இருந்த பரவசப் போக்கு ஆகியவைகளைக் களைந்து அமைப்பை முன்னைவிட உற்சாகமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென பிளீனம் உறுதி பூண்டது.

சக்திகளின் பலாபல நிலைமையில், கட்சி கட்டும் முதன்மைப் பணிக்கு ஏற்றவாறு மக்கள் திரள் அமைப்புப் பணிகளை முறைப்படுத்தி இயக்குவதென பிளீனம் முடிவெடுத்தது.

பின்னர் நடைபெற்றதேர்தலில் புதிய மாநிலஅமைப்புக் கமிட்டியும் அதன் செயலரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பிளீனப் பிரதிநிதிகள் தங்களது உரையில்,

அரசியல் அமைப்பு அறிக்கையின்மீது பல தோழர்களும் வைத்த விமர்சனங்களும் ஆலோசனைகளும் ஆரோக்கியமான விவாதங்களும் நமது அமைப்பு ஜனநாயக மத்தியத்துவத்தை மிகச் சரியாகக் கடைப்பிடிப்பதை தெளிவாக உணர்த்துவதாகவும் பிளீன முடிவுகளை அமுல்படுத்துவதில் புதிய மாநில அமைப்புக் கமிட்டியின் வழிகாட்டுதலில் புதிய முயற்சியோடு அமைப்பு வேலைகளுக்கு தோள் கொடுத்து முன் செல்வோம் என்றும் உறுதியளித்தனர்.

பாசிச ராஜீவ்கும்பல் தனிமைப்பட்டு, ஆளும் வர்க்கங்கள் அம்பலமாகி பாசிச அபாயம் சூழ்ந்து வரும் இச்சூழ்நிலைமையில் கூடிய இப்பிளீனம் கட்சி கட்டும் முதன்மைப் பணியைசெய்துஅரசியல் சக்தியாக எழவும் ஐக்கியத்திற்கான சித்தாந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து எடுத்துச் செல்லவும் வேண்டுகின்ற அனைத்துமுயற்சிகளையும்முனைப்பாக செய்வதென உறுதி பூண்டது.

புதிய மாநில அமைப்புக் கமிட்டியின் செயலர் தனதுமுடிவுரையில் அமைப்பின் முன்னுள்ள கடமைகளைச் சுட்டிக் காட்டி அவைகளை நிறைவேற்ற உறுதி ஏற்போம் என்றும், தோழர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் செயல்பட உறுதி ஏற்கிறேன் என்றும் கூறினார்.

அமைப்பில் உள்ள பிரச்சினைகளை அனைத்து மட்ட தோழர்களும் மனம்விட்டு பகிர்ந்து கொள்ளவும் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படவும் இப்பிளீனம் ஒரு வாய்ப்பாக அமைந்தது. இதையே ஆதாரமாகக் கொண்டு அமைப்புப் பிரச்சினைகளைத் தீர்க்கவும் அரசியல் ரீதியில் ஒரு வீச்சை ஏற்படுத்தவும் முயலுவோம் என பிளீனம் சூளுரைத்தது!

சர்வதேசிய கீதத்துடன் பிளீனம் நிறைவெய்தியது.

21.12.87

இவண்,
பிளீனத் தலைமைக் கமிட்டி,
மாநில அமைப்புக் கமிட்டி,
இந்தியப் பொதுவுடமைக் கட்சி
(மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட்)



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய—லெனினிய
அரசியல் ஏடு

மூன்றாமாண்டு

4

1—15 ஜனவரி '88

தனி இதழ் : ரூ 1
ஆண்டு சந்தா : ரூ 24

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத்தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர் 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை–600 015.

# எம்ஜிஆர் உருவாக்கிய கழுதைப்புலிகளும், வெறிநாய்களும்

பாசிச எம்ஜிஆரின் கல்லறை ஈரம் காயும் முன்பே, அவர் உருவாக்கி தலைமை தாங்கிய கட்சி இரண்டாக உடைந்து விட்டது.'இவ்வளவு சீக்கிரத்தில் இப்படிப்பட்ட ஒரு வருந்தத்தக்க நிலை ஏற்படும்என்று நிச்சயமாக எதிர்பார்க்கவில்லை. நடக்கக் கூடாதது ஒன்று நடந்துவிட்டது' என்று அரசியல் அலிகள் முகாரி பாடுகிறார்கள். ஆனால் அரசியல் அரிச்சுவடி அறிந்தவர்களுக்கு இது ஒன்றும் அதிர்ச்சி தரும் நிகழ்ச்சி அல்ல.

பிழைப்புவாதத்தையே முழுநேர அரசியலாகக் கொண்ட காரியவாத சுயநல கும்பல்களின் கலவைதான் அஇஅதிமுக. பிளவுப்பட்ட கோஷ்டிகள், எம்ஜிஆரின் தலைமையில் ஒன்றுபட்டிருந்ததற்கு, கலப்படமற்ற சுயநலம் தான் காரணம். மாறாக, எம்ஜிஆரின் மீதான பக்தியோ, அஇஅதிமுக கட்சியின் மீது கொண்ட விசுவாசமோ அல்ல.

சினிமா கவர்ச்சியின் மூலம் தமிழக மக்களிடம் ஓட்டுக்களைகுவிக்கும் இயந்திரமாக எம்ஜிஆர் விளங்கியதால்தான் எம்ஜிஆரை தங்கள் தானைத் தலைவராக ஏற்றுக் கொண்டிருந்தன, இக்கோஷ்டிகள். கூட்டுத்துவ தலைமை, கூட்டுத்துவ செயல்பாடு என்பது எல்லாம் பிழைப்புவாத கட்சியில் காணக் கிடைக்காத ஒன்று. பாசிஸ்ட் எம்ஜிஆருக்கும்—சுயமாக வேட்டையாடும் திராணியற்று, வேட்டையாடும் மிருகம் சுவைத்துவிட்டு போடும் எச்சிலை பொறுக்க காத்திருக்கும் கழுதைபுலிகள்தான் தேவையாய் இருந்தது. கழுதை புலிகள் இப்போது, எம்ஜிஆருக்கு பதிலாக எந்த மிருகத்தை நம்பினால் தொடர்ந்து ஆட்சி அதிகார எலும்பு துண்டு கிடைக்கும் என்று நாக்கை தொங்க போட்டுக் கொண்டு அலைகின்றன.

இதற்காக, எதிர் கோஷ்டி எம்எல்ஏக்களை விலைபேசி இழுப்பது, கடத்திக் கொண்டு போவது, அடியாட்களைக் கொண்டு மிரட்டுவது துப்பாக்கி முனையில் ஐந்து நட்சத்திர ஓட்டலில் அடைத்து வைத்து குளிப்பாட்டுவது, என்று ஆரம்பித்த பதவி வெறி சக்களத்தி சண்டை முடிவே இல்லாமல் தொடர்கிறது.

பெயருக்கு, தினசரி பத்திரிக்கைகளில் அவசர அறிவிப்பு கொடுத்து, ஏற்கனவே தாம் விலைபேசி கடத்தி வைத்திருந்த அதிமுக சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தை கூட்டி ஜானகி ராமச்சந்திரனை அதிமுக சட்டமன்ற கட்சியின் தலைவராகவும், தமிழக முதல்வராகவும் 97 எம்எல்ஏக்களின் ஆதரவுடன் தேர்ந்தெடுத்திருப்பதாக கூறி கவர்னர் குரானா முன் ஆதரவு எம்எல்ஏக்களை தூக்கிக் கொண்டுபோய்காண்பித்தது வீரப்பன்—காளிமுத்து கோஷ்டி.

அதிமுக மாவட்ட செயலாளர்கள் 20 பேரில் 15 பேர், இரவோடு இரவாக சென்னையில் கூடி, ஜெயலலிதாவை அதிமுக கட்சியின் பொது செயலராகதேர்ந்தெடுத்துவிட்டதாகநெடுஞ்செழியன்கோஷ்டிதிடீர்அறிவிப்பு செய்தது. இக்கோஷ்டியும் பெயருக்கு அதிமுக பொதுக்குழு அவசரமாக கூடுவதாக தினசரிகளில் அறிவிப்பு கொடுத்துவிட்டு, அடைத்து வைத்திருந்தவர்களை வைத்து பொதுக்குழுவை கூட்டியது. 'மாவட்ட செயலாளர்களால் நியமனம் செய்யப்பட்ட ஜெயலலிதாவை பொதுச் செயலராக உறுதி செய்து விட்டதாகவும், 70 சட்டமன்ற உறுப்பினர்கள் நெடுஞ்செழியனை அதிமுக சட்டமன்ற கட்சியின் தலைவராகவும் முதல்வராகவும் தேர்ந்தெடுத்து இருப்பதாக அரங்கநாயகம் அறிவித்தார். சட்டமன்ற கூட்டத்தில் தங்கள் பலத்தை நிரூபிக்க அனுமதிக்குமாறு கவர்னரிடம் வேண்டிக் கொண்டார் நெடுஞ்செழியன். இவை எல்லாம் கட்சி விதிகளுக்கே முரணானது என இரு கோஷ்டிகளும் குற்றம் சாட்டிக் கொண்டன; ஏதோ இதுநாள் வரையில் எம்ஜிஆர் கட்சி விதிகளை வரிக்கு வரி படித்து அமுல்படுத்தியது போல.

இதற்கிடையில், இ.காங்கிரசு கட்சியின் தலைமை தொடர்ச்சியாக தமிழகத்திலேயே முகாம்அடித்து அதிமுகவின் எந்த ஒரு கோஷ்டியை கைக்குள் போட்டுக் கொள்வது, எதன்மீது பாய்வது என வெறிநாயாய் அலைகிறது. ஏற்கனவே தென் இந்திய மாநிலங்களில் துடைத்தொழிக்கப்பட்ட இ. காங்கிரசு கட்சி, தமக்கு நிபந்தனையற்ற ஒரே ஆதரவு சக்தியாக விளங்கிய எம்ஜிஆரை இழந்து விட்டிருப்பதால் இப்போது மூர்க்கமாக அதிமுக கட்சியின் கோஷ்டி சண்டையில் தலையிட்டு தன்னுடைய அடிவருடி கோஷ்டி ஆட்சியை ஆட்சி கட்டிலில் அமர்த்த துடிக்கிறது. இதை மிக விரைவாக செய்து முடிப்பதற்காக கவர்னர் குரனா மூலம் மிககுறுகிய காலக்கெடு கொடுத்து புதிய முதலமைச்சரை தேர்ந்தெடுக்க வேண்டும் என அதிமுக கோஷ்டிகளை நிர்பந்திக்கிறது.

நடந்து கொண்டிருக்கும் அதிகார பங்கீட்டுக்கான பதவி வெறி கோஷ்டி சண்டைகள் நிரூபிப்பது இதைதான். போலிக் கம்யூனிஸ்ட்டுகள் சொல்வது மாதிரி மக்களிடம் இருக்கும் பாராளுமன்ற—சட்டமன்ற மாயையிலோ, ஜனநாயகத்தை காக்கும் தூண்களாகவோ சட்டமன்றம், பாராளுமன்றம் செயல்படவில்லை. அரசு சன்மானங்களுக்கும், பதவிகளுக்குமான குவிமையம் என்ற அளவில்தான் அது இயங்குகிறது. ●

படிப்பகம்

www.padippakam.com

# உலகத் தமிழர்களின் எதிரி ராஜீவ்

ஆறு மாதங்கள். ராஜீவ்—ஜெயவர்த்தனே ஒப்பந்தம் கைச்சாத்திட்டு ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. ஒப்பந்தத்தின்படி வாக்களித்த எதையுமே அவர்கள் சாதிக்க முடியவில்லை. கையெழுத்தாகும் 48 மணி நேரத்தில் போர் ஓய்வு; 72 மணி நேரத்தில் போராளிகள் ஆயுதங்களை ஒப்படைத்துவிடுவது; ஒரு வாரத்தில் அவர்களுக்குப் பொது மன்னிப்பு, தடுப்புக் காவல் கைதிகள் விடுதலை; ஆறு மாதத்தில் வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பு, இடைக்கால நிர்வாக அமைப்பு—எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கையில் இரத்தக் களறி நிறுத்தப்படும், அமைதி நிலைநாட்டப்படும் என்று விரைவானதொரு கால அட்டவணையும் இலக்கும் நிர்ணயித்து -எல்லாம் கம்ப்யூட்டர் கணக்குப் போட்டாற்போன்று துல்லியமாகச் சொன்னார்கள்.

ஆனால் எதுவுமே நடக்கவில்லை, இந்தத் திசையில். எல்லாம் எதிர்த் திசையில் சரிந்தன. ராஜீவ்-ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை வாழ்த்தி வரவேற்றவர்கள், தாங்கிப் போற்றியவர்களிலேகூட பலர் அதன் தோல்வியை ஒப்புக் கொள்ளத் தொடங்கிவிட்டனர். ஆனால் கைச்சாத்திட்ட பாசிஸ்டுகளும் அவர்களது பாதந்தாங்கிகளும் தோல்வியை ஒப்புக்கொள்ளவில்லை! பாசிஸ்டுகள் ஒருபோதும் தோல்வியை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஒப்பந்தத்தை உறுதியாக அமுல்படுத்துவோம் என்று விடாப்பிடியாகக் கூறுகின்றனர். புலிகளை நிராயுதபாணிகளாக்குவதில் — புலிகளைப் பூண்டோடு ஒழிப்பதில் சற்றுத் தாமதமாகிறது—இதுவும் நாங்கள் எதிர்பார்த்ததுதான் என்று சாதிக்கிறார்கள்.


இலங்கையிலிருந்து நாளும் கேட்கும் துப்பாக்கி—வெடிகுண்டுச் சத்தங்களும் சாவுகளும் பாசிஸ்டுகளின் பகற்கனவுகளைத் தகர்க்கின்றன. 1983 ஜூலை தமிழினப் படுகொலைக்குப் பிறகு நான்கு ஆண்டுகளில் சிங்கள ராணுவம் நடத்திய தாக்குதலினால் ஏற்பட்ட சாவுகளும் அழிவுகளும் கூட 1987 ஜூலை ஒப்பந்தம் கையெழுத்தானதற்கும் பிறகு ஆறு மாதங்களில் இந்திய ராணுவம் நடத்திய தாக்குதலினால் ஏற்பட்ட சாவுகளும் அழிவுகளையும் விடக் குறைவுதான்! இந்த ஆறு மாதங்களில் ஆயிரத்துக்கும் மேலான தமிழ்—சிங்கள சிவிலியன்களும், ஏறக்குறைய 200 போராளிகளும் கொல்லப்பட்டிருக்கின்றனர். ஆயிரத்துக்கும் மேலான இந்திய இராணுவத்தினரை பாசிச ராஜீவ் கும்பல் பலி கொடுத்திருக்கிறது. இலங்கையை ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள், உள்ளூர் தலைவர்கள் முதல் பெருந்தலைவர் வரை 150 பேரை பாசிச ஜெயவர்த்தனா கும்பல் தெற்கே பலிகொடுத்திருக்கிறது. இதுவரை 600 கோடி ரூபாய் ஈழப் போருக்காக இந்திய அரசு மட்டும் செலவிட்டிருக்கிறது. இவை இந்திய—இலங்கை அதிகார பூர்வ அரசு ஆதரவு நிறுவனங்களின் செய்திகள்.

இவ்வளவு பெரிய இழப்புகள் இருப்பினும் இந்தியாவின் இலங்கை ஆக்கிரமிப்பும், ஈழப் போரும் தொடருவது ஏன்? இலங்கைத் தமிழர்களின் நலன்களுக்காகத்தானென்று பாசிச ராஜீவ் கும்பல் இங்கே பொய்ப் பிரச்சாரம் செய்கிறது. ஆனால் இலங்கையில் தற்போதைய நிலைமை என்ன?

ஒப்பந்தத்திற்கும், இந்திய ஆக்கிரமிப்புக்கும் எதிராக சிங்கள மக்களின் வெறுப்பும் கோபமும் அதிகரித்து வருவதாக இந்தியப் பத்திரிக்கைகள் கூறுகின்றன. உளவு நிறுவனங்களும் ஒப்புக் கொள்ளுகின்றன. ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி )யின் தனி நபர் அழித்தொழிப்புகள் கூடி வருகின்றன. ஒரு வாரத்தில் ஜே. வி. பி.யை நசுக்குவதாகவும், அதற்காக பச்சைப் புலிகள்படை அமைப்பதாகவும் ஜெயவர்த்தனே கூச்சல் போட்டார். அடுத்த வாரமே பச்சைப் புலிகள் படைத் தலைவரும் ஜே. ஆரின் கட்சித் தலைவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்திய ஆக்கிரமிப்புப் படை ஈழத்தைத் தாண்டி தெற்கேயும் அழைக்கப்படுகிறது. தேவையானால் பாகிஸ்தான் இராணுவத்தை அழைப்போம் என்கிறார் மந்திரி காமினி திஸ்நாயகே.

"யாழ் நகரைக் கைப்பற்றுவதற்கான சண்டை முடிந்துவிட்டது; ஆனால் ஈழத்துக்கான போர் தொடர்கிறது" என்றுதான் இந்தியா—இலங்கை உட்பட எல்லா நாட்டுப் பத்திரிகைகளும் கூறுகின்றன. வியத்நாம் போரில் அமெரிக்கப் படையும், ஆஃப்கான் போரில் ரஷ்யப் படையும், கம்பூச்சியாப் போரில் வியத்நாம் படையும் சிக்கியதைப் போல் புதை சேற்றில் இந்தியப் படை சிக்கிக் கொண்டது. மரபுவழி நீண்டகால கொரில்லாப் போரில் ஈழப் போராளிகள் இறங்கிவிட்டனர். அதற்குத் தினந்தோறும் 10 இந்திய ராணுவத்தினரும் 5 புலிகளும் 10 தமிழ்-சிங்கள சிவிலியன்களும் பலியாவதாக செய்திகள் வருகின்றன. ஈழம் முழுவதும் ஏறக்குறைய எப்போதும் ஊரடங்கு உத்தரவின் கீழ் இருக்கிறது. புலிகளைத் தேடி நிராயுதபாணிகளாக்குவது என்கிற பெயரில் இந்திய—இலங்கை இராணுவத்தினர் நடத்தும் படுகொலைகள், சூறையாடல், கொள்ளைகள், கற்பழிப்புகள் இலங்கை மக்களிடையே மேலும் மேலும் கோபாவேசத்தைத் தூண்டி வருகின்றன.

ராஜீவ் அரசின் பிராந்திய மேலாதிக்க கொள்கையை அண்டை நாடுகளின் பாதுகாப்புக்கானது என சித்தரிக்கும் (முதலாளித்துவ பத்திரிகைகளின்) கருத்துப் படம்.





படிப்பகம்

யாழ்நகர் மாமூல் நிலைக்குத் திரும்பி விட்டதாக இந்தியாவில் பொய்ப் பிரச்சாரம் நடக்கிறது. ஆனால் எப்படிப்பட்ட மாமூல் நிலைமை தெரியுமா? இலங்கை இராணுவத்தின் உச்சபட்ச தாக்குதலின் போதுகூட தொடர்ந்து 3, 4 நாட்கள் அங்கு ஊரடங்கு விதிக்கப்படவில்லை. இப்போது மாலை முதல் காலை வரை 14 மணி நேரமும் தொடர்ந்து ஊரடங்கு. பெண்கள் வெளியே வரவே அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கின்றனர். அதிகாலை 8 மணிக்குப் புறப்பட்டு கடலுக்குப் போகவேண்டிய மீனவர்கள் கூட 8 மணிக்கு முன்பு வெளியே காலெடுத்து வைக்க முடியாது. மின்சார இணைப்பில்லாததால் குடிநீர்கூட கிடைப்பதில்லை. ஒரு தேக்கரண்டி பால் பவுடருக்காக இந்திய இராணுவ முகாம்களின் முன்பு மக்கள் வரிசையில் காத்துக் கிடக்கும்படி நிற்க வைக்கப்படுகிறார்கள். கடந்த ஆண்டு சிங்கள இராணுவம் போட்ட பொருளாதார முற்றுகையின்போதிருந்ததைவிட நிலைமை மோசமாக இருக்கிறது.

மின் இணைப்புகளும், தொலைபேசித் தகவல்களும் நிறுவப்படுவதாக இந்தியா பிரச்சாரம் செய்வது உண்மைதான்! அதாவது இந்திய இராணுவ முகாம்களுக்கு இந்த வசதிகள் செய்து தரப்படுகின்றன. இந்திய இராணுவம் ஈழத்தில் நீண்டகாலம் தங்கிவிடும் என்கிற மக்களின் சந்தேகத்தை இவை வலுப்படுத்துகின்றன. இந்திய இராணுவம் கல்வி நிலையங்களைத் திறந்து, தேர்வு பற்றிய அறிவிப்புகளை செய்தாலும் மாணவர்கள் திரும்புவதற்கான அறிகுறியே இல்லை. அரசு அலுவலகங்கள் இயங்குவதாகச் சொன்னாலும் அலுவலகக் கட்டிடங்கள் அனைத்தும் இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ்தான் உள்ளன.

யாழ் நகரின் ஒவ்வொரு தெரு முனையிலும் போர் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும் பதுங்கு குழிகள் வெட்டி நிரந்தரமாக இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். நடந்தும் வாகனங்களிலும் எந்நேரமும் ரோந்து சுற்றுகின்றனர். ஏராளமான சோதனைச் சாவடிகள் நிறுவி போவோர் வருவோரின் மூட்டை முடிச்சுகளைச் சோதனையிடுகின்றனர். சொந்த நாட்டு மக்களிடம் அடையாளம் கோரி ஆக்கிரமிப்பு ராணுவம் துன்புறுத்துகிறது. பெண்கள் ஆடைகளுக்குள் ஆயுதங்களை ஒளித்து வருவதாகச் சொல்லி அவமானப்படுத்துகிறது; இந்த இழிசெயலுக்கு உதவியாக இந்தியாவில் இருந்து பெண் போலீஸ் படை வந்துள்ளது.

ஆக, போரிடுவதற்கு இந்திய இராணுவம், போலீஸ் வேலை செய்வதற்கு இந்திய மத்திய ரிசர்வ் படையும் இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையும், நிர்வாகத்துக்கு இந்திய சிவில் நிர்வாக அதிகாரிகள், கல்வி நிலையங்களை நடத்துவதற்கு இந்திய ஆசிரியர்கள்— நீண்டகால ஆக்கிரமிப்புக்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன. எனவே 'ஒப்பந்தத்தை நிறைவேற்றுவது எமது ஒரு பகுதி, உடனடி நோக்கம்தான்; அது நிறைவேறாமல் போனால்கூட வேறு முக்கியமான நீண்டகால யுத்த தந்திர நோக்கங்கள் நிறைவேற்றப்படுகிறது' என்று இப்போது இந்திய அதிகாரிகளும் பத்திரிக்கைகளும் பகிரங்கமாகவே சொல்கின்றன.

"1971 வங்கதேசப் போரின் போது காணப்பட்ட எக்களிப்பும் நம்பிக்கையும் இந்திய இராணுவத் தலைமையகத்தில் நிலவுகிறது. இலங்கையில் இந்திய இராணுவம் இருப்பதானது சமீப ஆண்டுகளில் இந்திய அரசு தந்திரத்தின் துணிச்சலான முன் முயற்சியின் கூர்முனையாகக் கருதப்படுகிறது. இதை இந்தியாவின் பிராந்திய மற்றும் சர்வதேசப் பேராசைகளுக்கான 'திருப்பு முனை' என்று முதிர்ந்த தூதர்களும் இராணுவ யுத்த தந்திர வல்லுநர்களும் குறிப்பிடுகிறார்கள்" (இந்தியா டுடே—டிசம்.15 '87)

"ஈழப் போருக்காக செலவிடும் ஒவ்வொரு சல்லிக்காசும், ஈழப் போரில் பலி கொடுக்கப்படும் ஒவ்வொரு இந்திய சிப்பாயின் உயிரும் அதற்கு ஈடான பயனுடையது. உடனடி நோக்கம் இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை அமுலாக்குவதாக இருக்கலாம். ஆனால் இலங்கைத் தீவில் இந்திய ராணுவம் தங்கியிருப்பதானது மேலும் பரந்து விரிந்த அரசு தந்திர சாதகமான பயன்களைத் தரக்கூடியது; அதாவது இறுதியாக, உறுதியாக இந்தப் பிராந்தியத்தின் மேல் நிலை வல்லரசாக இந்தியாவை நிலைநாட்டுவதற்கான துவக்கமாக உள்ளது."

இலங்கையில் இந்திய இராணுவ நிலைமைகள் பற்றிய இரகசிய அறிக்கைகள், பிரதமருக்குத் தரப்படும் சுருக்கமான குறிப்புகள், தந்திரோபாய அறிக்கைகள், நீண்டகால யுத்த தந்திரத் திட்டவரைவு அறிக்கைகள்—இவை அனைத்தும் அடங்கிய கோப்புகள் காட்டுவது இதைத்தான். இந்தியாவின் இலங்கைப் போர், இந்தியாவின் புதிய ஆக்கிரமிப்புக் கொள்கை ஆகியவற்றின் மூலம் இந்தியா பரந்து விரிந்த அரசு தந்திர ஆதாயங்களை அறுவடை செய்ய முடியும். இந்த கொள்கையின் முக்கிய உறுப்பாக இருப்பது இந்திய இராணுவம். எனவேதான் "1962இல் இருந்ததைப் போல இந்திய இராணுவம் இல்லை. இப்போது இந்தியாவின் ஆதிக்க நோக்கங்களுக்குப் பொருத்தமாக விளங்குகிறது" என்று இந்திய இராணுவத் தளபதி ஒருவர்

"நாங்கள் முன்பு தப்பி ஓடி வந்ததைவிட இலங்கையில் இந்திய அமைதிப்படை வந்திருப்பதால் இப்போது நிலைமை மோசமாக இருக்கிறது."







"திரும்பிப் போகும்படி இப்போது என்னை நிர்பந்தித்தால், எப்படிப்பட்ட வாழ்க்கைக்குத் திரும்புவேன் என்றே தெரியாது."



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

பெருமையோடு சொல்லிக் கொள்கிறார்.

இந்தியாவின் ஈழப் போர் இங்கிலாந்து நடத்திய ஃபால்க்லாந்து போரைப் போன்றது. இலங்கை எந்த சூழ்நிலையிலும் வியத்நாமாகவோ, ஆஃப்கானாகவோ மாறாது என்று இராணுவ இரகசிய அறிக்கைகள் வாதிடுகின்றன. விடுதலைப் புலிகளுடனான போர் நீண்ட காலம் நீடிக்கும், இலங்கையில் காலவரையறையின்றி இந்திய இராணுவம் தங்கிவிடும் என்பதை இந்தியாவின் இரகசிய இராணுவ அறிக்கைகள் தெளிவாகவே குறிப்பிடுகின்றன பாகிஸ்தான் வங்கதேசம், பூடான் மற்றும் நேபாளம் ஆகிய அண்டை நாடுகளை மிரட்டி இந்தியாவின் பிராந்திய ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வருவதற்கான இராணுவ ரீதியான நடவடிக்கையாக இது கருதப்படுகிறது. இந்தியா—சீனா எல்லைத் தகராறில்கூட இந்தியா விரைப்பாக நடந்து கொண்டு சாதகமான பலன்களைப் பெற இது உதவும் என்று பாசிச ராஜீவ் கும்பல் கருதுகிறது. ராஜீவ் தயங்கி பின்வாங்கினால்கூட பிராந்திய விஸ்தரிப்பு மற்றும் ஆக்கிரமிப்புக் கொள்கையை மூர்க்கமாக முன் தள்ளுவது என்கிற தீர்மானத்துடன் தளபதி சுந்தர்ஜி செயல்படுகிறார்.

“இந்தியாவின் ஆதிக்கத்தை முன் தள்ளுவது’ என்று எதை இந்திய அரசு தந்திர அதிகாரிகள் குறிப்பிடுகிறார்களோ அதையே ‘யுத்தத்தின் மேலும் உயர்ந்த திசைவழி’ என்று இராணுவ அதிகாரிகள் மாற்றுகிறார்கள். இந்தியாவினுடைய நீண்டகால நலன்களின் லாபங்களோடு ஒப்பிடும்போதுஇலங்கையில் நேரும் உயிரிழப்புகள், நிதி நட்டம், எதிரி தமிழினத்தவர் (இதனால் தமிழகததில் பாதிப்பு) ஆகிய அனைத்தும்சிறிய தியாகமாகக் கருதப்படுகிறது. புது டில்லியின் ‘செல்வாக்கு மண்டலத்தை’ நிறுவுவதற்குத் தரப்பட்ட மிகக் குறைந்த விலைதான் 266 (அதிகாரபூர்வ அறிவிப்பு) இந்திய இராணுவ வீரர்களின் உயிர் என்று இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன”.

ஆக, பிராந்திய விஸ்தரிப்பு மற்றும் பிராந்திய “மேலாதிக்கநோக்கத்திற்காகத் திட்டமிட்டு நடத்தப்பட்டதுதான் இலங்கை ஆக்கிரமிப்பும் ஈழப் போரும் என்று இராணுவ அரசு தந்திர இரகசிய ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. இலங்கைத் தமிழர்களின் நலன்களைக் காப்பதற்காகவும், அமைதியை நிலைநாட்டுவதற்காகவும்தான் ஒப்பந்தம் போடப்பட்டது, இந்திய இராணுவம் அனுப்பப்பட்டது என்று தமிழக மக்களிடம் புளுகினாலும் ஆக்கிரமிப்பு—ஆதிக்க வல்லரசுகளைப் போலவே பாசிச ராஜீவ் கும்பல் உயர் அரசியல்மட்டங்களில் வாதிடுகிறது. அதாவது இலங்கையின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் காப்பாற்றுவது இந்துமா கடல் பிராந்தியத்தின் ஸ்திரப்பாட்டுக்கு அவசியமானது; இந்திய ராணுவம் போகவில்லையானால் ஜெயவர்த்தனே பாகிஸ்தான் ராணுவத்தை அழைத்திருப்பார்; ஏற்கனவே இங்கிலாந்து, இஸ்ரேல், பாகிஸ்தான் படைகள் இலங்கை ராணுவத்துக்குப் பயிற்சி அளித்து வந்தது. அவை ஆயுதங்களையும் கூலிப் படைகளையும் அனுப்பின; யுத்த தந்திர முக்கியத்துவம் வாய்ந்த திரிகோணமலை தீவு இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது; இல்லையானால் இன்னொரு டிகாகோ கார்ஸியாவைப் போல அமெரிக்கக் கடற்படைத் தளமாக மாறியிருக்கும்.

அமெரிக்காவின் ஓய்வு மற்றும் பொழுதுபோக்குத் தளமாக திரிகோணமலை அனுமதிக்கப்பட்டிருக்குமானால் இந்தியக் கடற்படையை மும்மடங்கு விரிவாக்க வேண்டி இருக்கும். ஏற்கனவே 1971 வங்கதேசப் போரில் பாகிஸ்தான் விமானப்படை எரிபொருள் நிரப்பிக் கொள்ள இலங்கை அனுமதித்தது. இனி இவை எதுவுமே சாத்தியமில்லை; எனவே பிரதானமாக இந்தியாவின்பாதுகாப்புநலன்களுக்காகத்தான் இலங்கை நடவடிக்கைகளை மேற்கொண்டோம் என்று பகிரங்கமாகவே இந்திய அரசுத் தலைவர்கள் பேசுகிறார்கள்.

இதையே இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள போலிக் கம்யூனிஸ்டுகள் உட்பட ‘முற்போக்குகள்’ வாந்தியெடுக்கின்றன. இந்தியாவின் இலங்கை ஒப்பந்தமும், இந்தியப் படையெடுப்பும் ஏதோ அமெரிக்க மற்றும் பாகிஸ்தான் சதிகளை முறியடிப்பதற்கான வீரதீரமான செய்கைகளாக அவர்கள் சித்தரிக்கின்றனர். உண்மையோ வேறு விதமாக உள்ளது. ஒப்பந்தம் கையெழுத்தான ஓரிரு மணி நேரத்தில் யுத்தவெறியன் ரீகன்நேரடியாகவே வரவேற்றுள்ளான். “பாகிஸ்தானின் யுத்த தந்திரக்கூட்டை அமெரிக்கா மதிக்கிறது; ஆனால் இந்த பிராந்தியத்தின் ஸ்திரப்பாடும்அமெரிக்க நலன்களுக்கு அவசியமாக உள்ளது. இந்தியா மட்டுமே அதைச் சாதிக்க முடியும்” என்று அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர். சமீபத்திய ராஜீவ்—ரீகன்சந்திப்புக்குப் பிறகு “இந்தியாவின் பிராந்திய பங்கு—பாத்திரத்தை அமெரிக்கா அங்கீகரித்துள்ளது” என்று ராஜீவ் அறிவித்ததோடு பல புதிய இராணுவ ஆயுத தளவாட தொழில்நுட்பக் கூட்டுகளைப்போட்டுள்ளார். திரிகோணமலை அமெரிக்காவின் ஓய்வு மற்றும் பொழுதுபோக்குத்தளமாகி விடும் அபாயம் குறித்து ஒப்பாரி வைத்துக் கொண்டே வளைகுடா போரில் ஈடுபட்டுள்ள அமெரிககக் கடற்படை, இந்தியாவின் கொச்சி துறைமுகத்தை அதற்காகப் பயன்படுத்தஅனுமதிக்கிறது ராஜீவ் கும்பல்.

**கூலிக்கு ஆயுதந் தூக்கிய கும்பலுக்கே இவ்வளவு திமிர் இருந்தால் கொள்கைக்கு ஆயுதந் தூக்கிய போராளிகளுக்கு எவ்வளவு உறுதி இருக்கும்!**

பாசிச ராஜீவ்—ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை துறைமுகங்களில் இந்திய இராணுவத்துக்கு உரிமை, திரிகோணமலை எண்ணெய் கிடங்கு—வயல்களை இந்தியா பயன்படுத்துவது, இலங்கையுடன் தொழில்—இராணுவக் கூட்டு, இலங்கையில் ஒலிபரப்பு—துறைமுகங்கள் ஆகிய வசதிகளை இந்தியாவின் எதிராளிகளுக்கு மறுப்பது ஆகிய நான்கு நலன்கள் இந்தியாவுக்குக் கிட்டும்.

இந்த உரிமைகளுக்காக இந்தியா தருவதாக ஒப்புக்கொண்ட ஈடு, விட்டுக்கொடுக்கும் உரிமைகள்—சலுகைகள், இந்தியாவுக்கு ஏற்படும் இழப்புகள் எதுவுமே இல்லை. மாறாக ஈழத்தில் “அமைதி”யை உத்திரவாதம் செய்வது, பாக்நீர் சந்தியின் மூலம் ஆயுதங்கள் போகாதவாறு கூட்டுக் காவல் புரிவது, இலங்கை இராணுவத்துக்குப் பயிற்சி அளிப்பது—அதாவது ஈழவிடுதலை இயக்கத்தை ஒழித்துக்கட்டுவது—இஸ்ரேலிய பாகிஸ்தானிய, பிரிட்டிஷ் கூலிப்படைகள் செய்து வந்த காரியங்களை இந்திய இராணுவம் மேற்கொள்ளும், கூடுதலாக மேலாதிக்க உரிமையுடன்.

இந்த ஒப்பந்தத்தை ஏற்று அமுல் நடத்துவ்தற்காகநிபந்தனையின்றி ஆயுதங்களை ஒப்படைத்து சரணடைய வேண்டும், இல்லையானால் படுகொலைகள் தொடரும் என்று பாசிச ராஜீவ் கும்பல் மிரட்டுகிறது. இவ்வளவு அடாவடித்தனமாக நடந்து கொள்ளும் உரிமை அதற்கு எப்படி வந்தது? யார் கொடுத்தது? 12 லட்சம் பேரைக் கொண்ட மிகப்பெரிய இராணுவ பலம்—ஆயுத பலம், அதிகாரத் திமிர் தான் காரணம். படை பலமும் ஆயுத பலமும் இருந்தால் எதையும் சாதித்துவிட முடியும் என்கிற அகங்காரம். ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து பெறும் கூலிக்கு ஆயுதந் தூக்கும் கும்பலுக்கே இவ்வளவு திமிர் இருந்தால் கொள்கைக்கு ஆயுதந் தூக்கிய போராளிகளுக்கு அதைவிடக்கூடுதலான உறுதி இருக்கும்!



படிப்பகம்

www.padippakam.com



தென்னிலங்கையிலும் இந்திய ராணுவம் குவிக்கப்பட்டிருக்கிறது. ராணுவ வெறியாட்டம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இன்னொரு மேல்நிலை வல்லரசான ருஷ்யாவோ முந்திக்கொண்டு வந்து பாசிச ராஜீவ் கும்பலின் விஸ்தரிப்பு மற்றும் ஆக்கிரமிப்புக்கொள்கைகளை ஆதரித்தது. வங்கதேசப் போருக்கு முன்பு போடப்பட்ட இந்திய—ருஷ்யா இராணுவ ஒப்பந்தமே இந்தியாவின் பிராந்திய மேலாதிக்கத்தை அங்கீகரிப்பது தான். இரு வல்லரசுகள் தவிர பிற மேற்கு ஏகாதிபத்தியங்களின் கூட்டமைப்பான ஐரோப்பியப் பொருளாதார சமூகமும் இந்தியாவின் நடவடிக்கைகளை ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்தியா, இலங்கை போன்ற பின்தங்கிய மூன்றாம் உலகநாடுகள் மீது மேலாதிக்கம் வகிக்கவும், கொள்ளையிடவும், செல்வாக்கு மண்டலங்களாகப்பகிர்ந்துகொள்ளவும் அமெரிக்கா மற்றும்ருஷ்ய மேல்நிலை வல்லரசுகளுக்கிடையே கடும் போட்டி நிலவுவது உண்மையே. அதேசமயம் இந்தநாடுகளின் விடுதலைப் போர்களையும் சமுதாயப் புரட்சிகளையும் அடக்கி ஒடுக்குவதில் அவர்கள் கூட்டுச் சேர்ந்திருப்பதும் உண்மையே. விடுதலைப் போர்களும், புரட்சிகளும் வெடிப்பதைத்தான் "ஸ்திரத் தன்மையைக் குலைப்பதாக" அவர்கள் கருதுகிறார்கள். அவற்றை ஒடுக்குவதைத்தான் "ஸ்திரத் தன்மையைக் காப்பதாக" கருதுகிறார்கள்.

அமெரிக்காவுக்கு இஸ்ரேலும், ருஷ்யாவுக்கு வியட்நாம் மற்றும் கியூபாவும் இருப்பதைப் போல தெற்கு ஆசிய பிராந்தியத்தின் அதிரடிக் கூலிப் படையாக, பிராந்திய போலீஸ் குண்டர் படையாக,பிராந்திய ஆதிக்கப் படையாக,அதே சமயம் அமெரிக்க—ருஷ்ய வல்லரசுகளின் இளைய பங்காளியாக இந்தியா பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவே பல்வேறு ஏகாதிபத்தியங்கள் வேட்டைக்காடு—அரைக் காலனி; அது எப்படி ஏகாதிபத்தியங்களின் இளைய பங்காளி ஆக முடியும்? என்று சிலர் சந்தேகிக்கின்றனர். இதுவொன்றும் புதிதல்ல. அரைக் காலனிய அடிமை நாடாக இருந்த சீனா இரண்டாம் உலகப் போரில் நேசநாடுகளின் கூட்டாளியாக சேர்த்துக் கொள்ளப்பட்டது; போருக்குப் பிறகு ஐக்கிய நாடுகள் சபையில் வீட்டோ (ரத்து) உரிமையுடன் கூடிய இளைய பங்காளியாக சேர்த்துக் கொள்ளப்பட்டது.

ஆக, தெற்கு ஆசிய பிராந்தியத்தில் எழும் எல்லா விடுதலைப் போர்களையும், புரட்சிகளையும் ஒடுக்கி, "பிராந்திய உறுதிப்பாட்டை"க் காக்கும் வல்லமை—ஆயுத படைபலமிக்கது இந்தியா தான் என்று ஏகாதிபத்தியங்களால் நியமிக்கப்பட்ட பேட்டை ரௌடியாக இந்தியா மாறியுள்ளது. உலக ஆதிக்க வல்லரசுகளின் சர்வதேச கூட்டுச் சதிக்கு ஈழத்தமிழினம் பலி கொடுக்கப்படுகிறது. மத வெறி சர்வாதிகார அரசின் கீழிருப்பினும் அமெரிக்க, ருஷ்ய வல்லரசுகளை எதிர்ப்பதால் ஈரானை ஒடுக்குவதிலும், விடுதலைப் போரில் ஊன்றி நிற்பதால் எரிட்ரீய, கிழக்குத் திமோர் மக்களை ஒடுக்குவதிலும் அவர்கள் கூட்டுச் சேர்ந்துள்ளதைப் போலவே ஈழத்தமிழினத்தை ஒடுக்குவதிலும் கூட்டுச் சேர்ந்துள்ளார்கள். இந்தியாவின் பிராந்திய ஆதிக்கத்தை அங்கீகரித்து இந்திய இராணுவத்தைக் கொண்டே அதைச் சாதிக்கத் துணிந்துள்ளார்கள்.

இந்தியாவின் விஸ்தரிப்பு மற்றும் பிராந்திய ஆதிக்கக் கொள்கைகளை இப்போது பகிரங்கமாகவே தேசிய வெறிபிடித்த தலைவர்களும் பத்திரிக்கைகளும் நியாயப்படுத்துகின்றன. "உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடு. படைபலமிக்க நாடு. தனது வல்லமையை நிலைநாட்டிக் கொள்வது இயல்புதான். சுண்டைக்காய் நாடுகளான இலங்கையும், நேபாளமும், பூட்டானும் கூட இந்தியாவை எதிர்க்கின்ற அளவு விட்டு விடுவதா? கூடாது. இந்தியா துணிச்சலான நடவடிக்கை எடுத்து தனது தகுதியை நிரூபித்துக் காட்டுவதே சரியானது" என்று பிரச்சாரம் செய்கிறார்கள்.

அரசியல் விழிப்புணர்வு பெறாத இந்தியப் பாமர மக்களில் பலரும் இந்த தேசிய வெறிக்குப் பலியாகிறார்கள். பெரும்பான்மையான உழைக்கும் மக்களோ தமது அன்றாடத் தேவைகளுக்கான போராட்டத்தில் மூழ்கி "இருக்கட்டுமே! ஈழத்தில் என்ன நடந்தால் எனக்கென்ன? இன்றைக்கு பாடுபட்டு உழைத்தால்தான் எனக்கும் என் பிள்ளை குட்டிகளுக்கும் ஒரு வேளை கஞ்சியாவது கிடைக்கும்" என்று வாழ்கிறார்கள். ஆனால் உழைக்கும் மக்கள் அப்படி ஒதுங்கியிருக்க முடியாது.

● இன்று 1000 இந்திய இராணுவத்தினரைப் பலி கொண்டிருக்கும் ஈழப்போர் இனிவரும் மாதங்களில் 5000–10,000 என்று உயரும். உழைக்கும் மக்களின் உற்றார் உறவினர்களானசாதாரண சிப்பாய்களே இந்திய ஆதிக்க வெறிக்கு காவு கொடுக்கப்படுவார்கள்.

● இதுவரையிலான போருக்குச் செலவு 600 கோடி ரூபாய் என்று அதிகாரபூர்வ செய்தி. உண்மையில் 2000 கோடியை தாண்டி விட்டது—அதாவது நாட்டின் மிகப் பெரிய மாநிலத்தின் ஒரு ஆண்டு வரவு செலவுத் தொகை. வங்கதேசப் போரைத் தொடர்ந்து வரிச்சுமை ஏறியதைப் போல இந்திய உழைக்கும்மக்கள்மீது ஈழப்போரின் சுமை விழும். இந்திய ராணுவம் போரிடுவதால் 800 கோடி ரூபாய் மிச்சப்படுத்தி இலங்கை அரசு ஊழியருக்கு சம்பள உயர்வு கொடுக்க முடிந்ததாக ஜெயவர்த்தனே கொக்கரிக்கிறான். வியத்நாம் போர் உலகிலேயே 'பணக்கார' நாடான அமெரிக்காவைப் பொருளாதார நெருக்கடியில் தள்ளியது என்றால் ஏழைநாடான இந்தியா ஈழப்போரின் சுமையைத் தாங்குமா?

● இன்னொரு நாட்டின் இன மக்களை அடிமைப்படுத்தும் அரசு இங்கே இருக்கும் சாதாரண சிறுசிறு உரிமைகளைக்கூட விட்டு வைக்காது. போரின் விளைவாய் ஏற்படும் அரசியல் பொருளாதார நெருக்கடிகள் உழைக்கும் மக்களின்



படிப்பகம்

www.padippakam.com

மீதே சுமத்தப்படும். அந்தச் சமயத்தில் திடீரென்று போராட அமைப்புபலமிருக்காது! போராடத் துணிந்தாலும் பாசிச முறைகளில் ஒடுக்கவே முயலுவார்கள். அப்போதும் “தேசிய நலன்கள்”, “தேசியப் பாதுகாப்பு” என்கிற பெயரில் அடக்குமுறை ஏவிவிடப்படும். நாடு யுத்தத்தில் இருக்கும் போது ஜனநாயக உரிமைகள், கூலி உயர்வு, போனசு போன்ற சலுகைகளுக்காகப் போராடுவதுகூட தேச துரோகமாகச் சித்தரிக்கப்படும். கொடிய பாதுகாப்புச் சட்டங்கள் தாராளமாக, ஏராளமாகப் பாயும்.

எனவே, இந்திய அரசின் தேசிய வெறி, விஸ்தரிப்பு மற்றும் பிராந்திய ஆதிக்க நடவடிக்கைகளை எதிர்க்காதது மட்டுமல்ல, சகித்துக் கொண்டிருப்பதும் கூட தவறாகும். இது வெறுமனே வெளிநாட்டுக் கொள்கை மட்டுமல்ல. பாசிசத்தின் வெளிநாட்டுக் கொள்கை. வெளிநாடுகளில் இப்படிப்பட்ட விஸ்தரிப்பு மற்றும் ஆதிக்க தேசிய வெறிபிடித்த கொள்கைகள் தாம் இட்லரும் மற்றும் முஸோலினியும் உள்நாட்டு பாசிசத்தை நியாயப்படுத்தப் பயன்பட்டன.

இந்திய உழைக்கும் மக்கள் மட்டுமல்ல உலகம் முழுவதும் உள்ள இந்திய வம்சா வழியினர் அவ்வளவு பேரும் இந்திய அரசின் விஸ்தரிப்பு மற்றும்பிராந்திய ஆதிக்கத்தை எதிர்த்திட வேண்டும். ஏனெனில் ஏகாதிபத்தியத்தின் இளைய பங்காளியாக, தரகனாக இருந்து ஆதாயங்களைப் பெறுவதற்காக இந்திய வம்சா வழியினர்கள் எவரையும் பலி கொடுக்க இந்திய அரசு தயாராக உள்ளது. ஈழத் தமிழின மக்களைக் கொன்று குவிப்பதை மட்டும் வைத்துக்கொண்டு இதைச் சொல்லவில்லை.

* பர்மாவில் குடியேறி பல்லாண்டுகள் பாடுபட்டுழைத்த இந்தியர்கள், குறிப்பாக தமிழர்கள் அகதிகளாக விரட்டப்பட்டபோது அவர்களுடைய உரிமைக்காக, நட்டஈடு பெறுவதற்குக்கூட இந்திய அரசு பரிந்து வரவில்லை.

* மலேசியாவிலும் மற்றும் பிற தென்கிழக்காசிய நாடுகளிலும் வாழும் இந்திய வம்சா வழியினர் குறிப்பாகத் தமிழர்கள் குடியுரிமை மறுக்கப்பட்டு எந்நேரத்திலும் விரட்டப்படும் அபாயத்தில் வாழுகின்றனர். பெரும்பான்மையினரது இன ஒடுக்குமுறை மற்றும் கலவரங்களுக்கும் பலியாகும்போதுகூட இந்திய அரசு உதவிடவில்லை.

● அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் வாழும் இந்தியர்கள் நிற வெறியர்களால் அவமானப் படுத்தப்படுகிறார்கள்; துன்புறுத்தப் படுகிறார்கள். அமெரிக்காவின் நியூ ஜெர்சியில் வாழும் இந்தியப் பெண்கள் நெற்றியில் பொட்டிட்டு வந்தால் தாக்கப்படுகின்றனர்; புடவை கட்டிக் கொண்டு வந்தால்அவற்றை உருவி அவமானப்படுத்தப்படுகின்றனர். இங்கிலாந்துபோய் இறங்கும் இந்தியப் பெண்களின் கன்னிமை விமான நிலையத்திலேயே பரிசோதிக்கப்படுகிறது. திடீர் திடீரென்று வெள்ளை இன வெறியர்கள் இந்தியர்களைத்தாக்குகின்றனர்.

● பல்லாண்டுகளாக இலங்கைத் தேயிலைத் தோட்டங்களில் வதியும் மலையகத் தமிழர்கள், இனக் கலவரத்துக்கும், அரசியல், பொருளாதார கலாச்சார ஒடுக்குமுறைக்கும் தொடர்ந்து பலியாகி வருகிறார்கள். அவர்களது உரிமைகளில் சிறிதும் அக்கரை காட்டாத இந்திய அரசு 1964 சாஸ்திரி—சிரிமாவோ ஒப்பந்தத்தின் மூலம் 5 லட்சம் மலையகத் தமிழர்களை நாடற்றவர்களாக அங்கீகரித்தது. எஞ்சியவர்களின் இலங்கைக் குடியுரிமைக்கும் உத்திரவாதமளிக்கவில்லை.

சாஸ்திரி—சிரிமாவோ ஒப்பந்தம் உலகம் முழுவதும் வாழும் இந்திய வம்சா வழியினரை நாடற்றவர்களாக்கித் துரத்துவதற்கான முன்னோடியாக, அருவருக்கத்தக்க சதிகார ஒப்பந்தமாக இருக்கிறது. ஏகாதிபத்திய எஜமானர்களிடம் அடகு வைத்து, ஆதாயம் அடைவதற்கான சரக்காகவே இந்திய வம்சாவழியினர் நடத்தப்படுகின்றனர். இதைத் தமது வெளிநாட்டுக் கொள்கையின் ஒரு அங்கமாகவே இந்திய அரசு கொண்டிருக்கிறது. இந்த துரோகத் தனத்தை ஈடேற்றுவது இந்திய உளவுப்படையான “ரா”வின் முக்கியப் பொறுப்புகள் — நோக்கங்களில் ஒன்றாக வகுக்கப்பட்டுள்ளது. ●

## வெகுஜனப் படுகொலையும் கற்பழிப்பும்

ஈழத்தை ஆக்கிரமித்துள்ள இந்திய இராணுவம் வெகுஜனப் படுகொலையிலும், கற்பழிப்புகளிலும், கொள்ளையிடுவதிலும் ஈடுபட்டிருப்பதாகத் தொடர்ந்துசெய்திகள் வருகின்றன. அக்குற்றச்சாட்டுகளுக்கு இந்திய அதிகாரிகள் தரும் பதில்கள் வேடிக்கையாகவும், குற்றங்களை மேலும் உறுதிப்படுத்துவதாகவும் உள்ளன.

யாழ்ப் போரின்போது கவச வண்டிகளை ஏற்றிப் படுகொலை செய்ததை அடியோடு மறுத்தார்கள். சென்ற மாதம் இந்தியத் தளபதி அளித்த பேட்டியில் மக்கள் தாறுமாறாக ஓடியதில் ஏற்பட்ட விபத்து; ஒரு சிலர் இறந்து போனார்கள் என்றார். யாழ்ப்போர் முடிந்த உடனே சாவகச்சேரியில் விடுதலைப் புலிகளின் முகாம்மீது குண்டுவீசி அழித்ததாகச் சொன்னார்கள்; சாவகச்சேரி கடை வீதியில் குண்டு வீசி 30க்கும் மேற்பட்ட பொது மக்களைக் கொன்றதாகப் புகைப்படங்களுடன் இந்தியநிருபர்களே நிருபித்தனர். அகதிகள் முகாம்மீது குண்டுவீசியதாக யாழ் நகரிலிருந்து தப்பி வந்தவர்கள் பேட்டியளித்தனர்.

முல்லைத் தீவிலும், மட்டக்களப்பிலும், வேறு சில இடங்களிலும் 20 பேர், 30 பேர் என்று பொது மக்கள் கொல்லப்படும் போதெல்லாம் புலிகளுடனான போரில் குறுக்கே சிக்கிக் கொண்டவர்கள் மாண்டதாக புளுகினர். கடைசியாக மட்டக்கிளப்பு கடை வீதியில் மூன்று போலீசாரைப் புலிகள் சுட்டுக்கொன்ற பிறகு பழி வாங்குவதற்காக தாறுமாறாகச் சுட்டு, 30 சிவிலியன்களை கொன்றனர். இது சிங்களப் போலீசின் நடவடிக்கை என்கிறது இந்திய அரசு. இந்திய இராணுவம் மற்றும் சிங்கள போலீசின் கூட்டு நடவடிக்கை என்கிறது இலங்கை அரசு.

கற்பழிப்புக் குற்றத்துக்காக 6 இந்திய இராணுவத்தினர்மீது நடவடிக்கை எடுத்திருப்பதாக யாழ் நகர நீதிபதி சொன்னதாக இந்து நிருபர் டி.பி.எஸ். ஜெயராஜ் அனுப்பிய செய்தி கூறியது. மறுநாள் நீதிபதியின் பெயரால் மறுப்பு அறிக்கை வெளியிட்டது இந்திய இராணுவம். 6 பேர்மீது கற்பழிப்பு குற்றச் சாட்டு வந்தது. குற்றஞ் சாட்டிய பெண்கள் முன்பு அடையாள அணிவகுப்பு நடந்தது. அவர்களால் அடையாளங் காட்ட முடியவில்லை. எனவே நடவடிக்கைஎடுக்கப்படவில்லைஎன்று அறிக்கை கூறுகிறது. அடையாள அணிவகுப்பு என்பதே பெரிய மோசடி என்பதை இந்தியாவிலுள்ள பலருக்கும் அனுபவம் உண்டு. ஈழத்திலுள்ள 30000 இராணுவ வீரர்களில் யாரோ சிலரை நிறுத்திவிட்டு குற்றவாளிகளைத் தப்பிக்கவிடுவது ஒன்றும் சிரமமில்லை.

யாழ் நகரிலிருந்த தப்பி வந்த பெண்களே கற்பழிப்புக் குற்றச் சாட்டுகளைக் கூறுகின்றனர். யாழ் பல்கலை மாணவர்களும் அதை உறுதி செய்கின்றனர். “பெண்கள் பாவாடை அணிந்து கோவிலுக்கு வரக்கூடாது, சைக்கிளில் போகக் கூடாது, அது இந்திய இராணுவத்தினரை அவமதிப்பதாகும்” என்று இந்திய அதிகாரிகள் சுவரொட்டி போட்டதும், கற்பழிக்கும்போது நகத்தால் கீறியோ, அடித்தோ அடையாளம் ஏற்படுத்துங்கள் என்று இந்திய அதிகாரிகள் பெண்களிடம் கூறியதும் குற்றச் சாட்டுகளை உறுதிப்படுத்தவே செய்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

# எம்.ஜி.ஆர்: ஒரு பாசிஸ்டின் மரணம்

● சாதாரண மக்கள் மீது கொலை வெறித்தாக்குதல் நடத்திய பாசிச எம்ஜிஆர்
கம்யூனிச புரட்சியாளர்களை விட்டு வைப்பாரா?
வட ஆற்காடு, தர்மபுரி, ராமநாதபுரம் மாவட்டங்களில்
கம்யூனிச புரட்சியாளர்கள் 21 பேரை
மோகன்தாஸ்—தேவாரம் போலீஸ் கும்பலை ஏவி
"நக்சலைட்டுகள்— மோதல்" என்று கதை கட்டி விட்டு
படுகொலை செய்தார் எம்ஜிஆர்



"இடி அமின்: எழுச்சியும் வீழ்ச்சியும்" என்ற புதிய சினிமா வந்திருக்கிறது. இப்போது இந்த சினிமா திரையிடப்பட்டதற்கும் எம் ஜி.ஆர் சாவுக்கும் எந்த சம்பந்தமுமில்லை. தற்செயலாக நேர்ந்ததுதான். எம்.ஜி.ஆர் பற்றி எழுதுவதற்கு முன்பு இந்தச் சினிமாவைப் பார்க்கவேண்டியது அவசியம் என்று கருதினோம், போய்ப் பார்த்து வந்தோம்.

ஏனெனில் 'எம்.ஜி.ஆர்: தமிழகத்தின் இடிஅமின்' என்று கடந்த பத்தாண்டுகளாக கருணாநிதி கட்சியின் பத்திரிக்கைகள் எழுதி வந்தன. அது மட்டுமல்ல எம்.ஜி.ஆரின் ஆட்சி, கோமாளிஆட்சி என்றும் எம்.ஜி.ஆர் ஒரு 'சேடிஸ்ட்' —குரூரஇன்பம் காண்பவர் என்றும் எழுதி வந்தன. அதாவது முட்டாள்தனமான கோமாளித்தனமான ஆட்சி நடத்துபவர், 'துக்ளக்'கைப் போல திடீர்திடீரென்று முடிவுகளை மாற்றிக்கொள்ளும் கோமாளி என்று வர்ணித்தனர். இதற்குப் பொருத்தமாக கத்தியை வைத்துக் கொண்டு பைத்தியம் போல முழித்துச் சிரிக்கும் எம்.ஜி.ஆரின் சினிமா படம் ஒன்றையும் தவறாது வெளியிட்டு வந்தன.

'சேடிஸ்ட்' என்றால் குரூர இன்பம் காண்பவர்— கழுதையின் வாலில் ஓலையைக் கட்டி தீ மூட்டுவது, தகர டப்பாவைக் கட்டி விரட்டுவது, ஓணானின் கழுத்தில் சுருக்கு வைத்து கயிற்றால் கட்டி இழுப்பது, விரட்டுவது, புழுவை ஊசியால் குத்தித் துடிதுடிப்பதை ரசிப்பது என்று சிறுவர்கள் குரூர இன்பம் காணும் விளையாட்டுகள் நடத்துவார்கள். அதே போல எதிரியைத் துன்புறுத்தி இன்பம் காணும் குணமுடைய 'சேடிஸ்ட்' எம்.ஜி.ஆர் என்றும் கருணாநிதி கட்சி பத்திரிக்கைகள் எழுதி வந்தன.

எம்.ஜி.ஆர் மரணச் செய்தி வந்தது. மறு நிமிடமே இவற்றையெல்லாம் 'மறந்துவிட்டு' பச்சோந்தித்தனமாக நிறத்தை மாற்றிக் கொண்டு நாற்பதாண்டு இனிய நண்பரை இழந்த துக்கத்தில் மூழ்கிவிட்டார் கருணாநிதி. அதுதான் பண்பாடு, ராஜதந்திரம் என்கிற மரபை ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகள் உருவாக்கி விட்டனர். அந்தப் பண்பாட்டில் நாம் வரவில்லை. எம்ஜிஆர் என்று சொன்னதும் ஒரு பாசிஸ்ட், ஒரு சேடிஸ்ட் ஒரு கொடூர கோமாளியின் முகமே நினைவுக்கு வருகிறது. எம்ஜிஆரின் சாவு அவரது பாசிசப் படுகொலைகளை, குரூர இன்பங்காணும் நடவடிக்கைகளை, கொடூரமான கோமாளித்தனங்களை மறைத்து விட முடியாது—எம்ஜிஆர் உடலோடு சேர்த்து மெரினாக் கடற்கரையில் புதைத்து விட முடியாது. அவை தமிழகத்தின் இருள் நிறைந்த பத்தாண்டு வரலாறு ஏற்படுத்திய வடுக்கள். மெரினா—அங்குதானே எம்ஜிஆரின் வெறி நாய்கள் தேவாரத்தின் தலைமையில் மீனவர்களைக் கடித்துக் குதறின; அங்குதானே மீனவர் குப்பங்களை சூறையாடின. அவை ஞாபகம் வருகின்றன.

இடி அமினும் இப்படித்தான் செய்தான். தன் குரூர இன்பத்துக்காக சொந்த நாட்டு மக்களையே படுகொலை செய்தான்; கிராமம் கிராமமாகச் சூறையாடினான். அதற்காக எம்ஜிஆரை முழுக்க முழுக்க தமிழகத்தின் அமீன் என்று சொல்லிவிட முடியுமா? முடியாது. கொஞ்சம் வித்தியாசங்களும் இருக்கின்றன—அதுவும் அளவுகளில் தான். தன்மைகளில் அல்ல. தமிழகம் ஒரு ஆஃப்ரிக்க நாடாக இருந்திருந்தால், இடி அமீன் அளவுக்கு எம்ஜிஆருக்கு அதிகாரம் இருந்திருந்தால், எல்லா வகையிலும் எம்ஜிஆர் இடி அமினாகவே இருந்திருப்பார். அல்லது இப்படியும் சொல்லலாம். இடி அமீன் தமிழக அரசியல் சூழ்நிலைகளில் ஆள வேண்டியிருந்தால் எம்.ஜி.ஆரைப் போல நாகரீகமான, பாசிஸ்டாக, நாசுக்கானசேடிஸ்டாக இருந்திருப்பான்.

இராணுவத் தளபதிகளில் ஒருவனாயிருந்த இடி அமீன் அதிரடி ஆட்சிக்கவிழ்ப்பின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றினாலும் உகாண்டா மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றிருந்தான். லஞ்ச ஊழலிலும், அதிகார முறை கேடுகளிலும் சிக்கித் தவித்த பின்தங்கிய உகாண்டாவை ஒரு சுபீட்சமிகு நாடாக மாற்ற உறுதியளித்தான். அதற்கு மாறாக தனது சொந்த ஆடம்பர, வக்கிர வாழ்க்கையை நிறுவி, தனது அரசியல் எதிரிகளையும் அப்பாவி மக்களையும் நரவேட்டையிடும் படு பயங்கரமான பாசிச சர்வாதிகாரத்தை நிறுவினான். விருந்துகளிலும், அரசு விழாக்களிலும், தற்புகழ்ச்சியிலும் மூழ்கித் திளைத்தான். "மாண்புமிகு, மாபெரும் தளபதி, டாக்டர் இடி அமீன் எம். ஓ.சி எஃப்,எல், சி.பி. டி.லிட்" என்று பட்டஞ் சூட்டிக் கொண்டான். அவ்வப்போது ஏகாதிபத்திய எதிர்ப்பு, சரண்டல் எதிர்ப்பு பிரசங்கங்கள் செய்தான். பாலஸ்தீன இன மக்க



படிப்பகம்

www.padippakam.com

ளின் விடுதலையை ஆதரிப்பதாகவும் இஸ்ரேலிய யூத இனவெறியையும், நிறவெறியையும் எதிர்ப்பதாகவும் பிரகடனம் செய்தான்.

அரசியல் ஆலோசனைக்காக "பாப் அஸ்ட்ல்" என்ற வெள்ளைக்காரனையும், அரசியல் எதிரிகளைப் படுகொலை செய்ய ஒரு இரகசிய போலீஸ் படையையும் இராணுவத் தளபதியையும் இடி அமின் வைத்துக் கொண்டான். தனது எடுபிடிகளையும், முகஸ்துதி செய்பவர்களையும் பதவிகள் கொடுத்து வைத்துக் கொண்டான். தனக்கு எதிரிகள் எனக் கருதும் இராணுவ வீரர்களை இரகசியமாகப் படுகொலை செய்தான். திடீர் திடீரென சிப்பாய்கள் காணாமல் போவதாக செய்தி வந்ததை அடுத்து அமினின் தளபதியிடம் பேட்டி காண வெளிநாட்டுப் பத்திரிக்கையாளர் ஒருவர் வருகிறார். அவரைப் பிடித்துப் போய் உளவு பார்த்ததாக வழக்குப் போடுகிறார்கள். வழக்கு நடக்கும் போதே கோர்ட்டை ஒத்திவைத்து விட்டுப் போய் இடிஅமினிடம் தொலைபேசியில் தொடர்பு கொள்கிறார் நீதிபதி. மரண தண்டனை தரும்படி உத்தரவிடுகிறான் இடிஅமின். போதிய ஆதாரமில்லை என்கிறார் நீதிபதி. "அப்படியானால் ஜனநாயகத்தையும், நீதியையும் இடிஅமின் மதிப்பதாக உலகம் அறியட்டும். விடுதலை செய்யுங்கள்" என்கிறான். நிருபர் விடுதலை செய்யப்படுகிறார். ஆனால் நீதிபதி கொல்லப்படுகிறார். இடிஅமினின் கட்டளையை மதிக்கவில்லை என்பதற்காக.

ஒருநாள் திடீரென்று அறிவிப்பு செய்கிறான் இடிஅமின். "உகாண்டா உகாண்டாக்காரர்களுக்கே சொந்தம். உகாண்டாவில் ரயில் பாதை அமைக்கவே ஆசியர்கள் வந்தார்கள். ரயில் பாதை போட்டாகிவிட்டன. இனி ஆசியர்கள் யாரும் இருக்கக் கூடாது. ஆசியர்கள் சுரண்டல்காரர்கள். 90 நாட்களில் அவர்கள் உகாண்டாவை விட்டு வெளியேற வேண்டும்" என்று நாடு கடத்தும் உத்திரவு போட்டான். ஆசியர்களில் ஒரு பகுதியினரை ஏற்பதாக கனடா தூதுவர் ஒப்புக் கொள்கிறார். "அவர்கள் ஒட்டுண்ணிகள். அவர்கள் எக்கேடோ கெட்டுப் போகட்டும். உங்களுக்கென்ன?" என்று எரிந்து விழுகிறான்.

ஆசியர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து, வியாபாரக் கடைகளை இழுத்து மூடுகிறான் இடிஅமின். ஒருநாள் தனது பரிவாரங்கள் சூழ அந்தக் கடைவீதி வழியே பவனி வருகிறான். திடீரென்று பின்னாலே வரும் ஒரு எடுபிடியைக் கூப்பிட்டு "இதோ இந்தக் கடை உனக்குச் சொந்தம்" என்கிறான். இன்னொருவன் கோமாளி— கோணங்கி, அரைப் பைத்தியம் போல நடப்பவன் — அவனை விளித்து "அதோ அந்தச் சொத்துக்களை உனக்குப் பரிசளிக்கிறேன்" என்று தானம் கொடுக்கிறான். எதிரே ஒரு துணிக்கடை, "இது என் மனைவிக்குச் சொந்தம். துணிகள் என்றால் அவளுக்குப் பிடிக்கும்" என்று உத்திரவிடுகிறான். தொடர்ந்து வந்த பரிவாரங்கள் கும்மாளமிட்டு கூச்சலிடுகின்றன. "மாண்புமிகு மாபெரும் தளபதி டாக்டர் இடிஅமின் வாழ்க!"

இரண்டு பத்திரிக்கை நிருபர்கள். உகாண்டாவிலிருந்து வெளியேற்றப்பட இருக்கும் இந்திய வியாபாரியைப் பேட்டி கண்டார்கள். இடிஅமினுக்கு எதிரான கருத்துக்களை பயந்து பயந்து அவர் சொல்கிறார். அதைக் கண்டு கொண்ட இடிஅமினின் உளவுப் படை இந்தியரைச் சுட்டுக் கொல்கிறது. நிருபர்களைக் கடத்திப் போய் கொன்று, காரில் போட்டு மலைமீதிருந்து உருட்டி விடுகிறது. அதே போல ஒரு பாதிரியைச் சுட்டுக் கொன்றுவிட்டு, மாரடைப்பாலோ, கார் விபத்திலோ மாண்டதாக சான்றிதழ் தரும்படி ஒரு டாக்டரை நிர்ப்பந்திக்கிறான் இடிஅமின். அவர் மறுக்கவே மலைப் பாதையில் இரண்டு கார்களை மோதி நிறுத்திவிட்டு, பாதிரியின் பிணத்தை காருக்குள் திணித்து விடுகிறார்கள். இவை தவிர ஏராளமான பேரைச் சிறை—சித்திரவதை படுகொலைகள் செய்கிறான்.

ஒரு பெரிய கோழியைப் பிடித்துக்கொண்டு, ஒரு நாட்டுப்புற மந்திரவாதியிடம் போகிறான் இடிஅமின். "என் எதிரிகளை ஒழித்துக் கட்டிவிட்டேன். இன்னும் சிலர் இருக்கலாம் என்று சந்தேகிக்கிறேன். அவர்கள் யார் என்று சொல்லுங்கள்" என குறி கேட்கிறான். ஒரு குறிப்பிட்ட மலை சாதி இனத்தவரைப் பற்றி மந்திரவாதி குறி சொல்கிறான். உடனே தனது படையை ஏவிவிட்டு அத்தனை பேரையும் அழிக்கிறான். ஆங்கிலேய ராணுவப் பதக்கங்கள் அத்தனையையும் தானே மார்பில் குத்திக் கொள்கிறான். ஆங்கிலேய அரசு தரும் கௌரவப் பட்டங்களைத் தானே சூட்டிக் கொள்கிறான்; தன்னை உகாண்டாவின் ஆயுட்கால அரசு தலைவராக நியமித்துக் கொள்கிறான்.

ஒரு பிரம்மாண்டமான விழா ஏற்பாடு செய்து, ஆறு வயது மகனை ராணுவ உடுப்பிட்டு, இராணுவப் பதக்கம் குத்தி வாரிசாக அறிவிக்கிறான். உகாண்டாவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஆச்சரியமான அறிவிப்பு ஒன்று செய்கிறான். "என் ஆட்சியைக் கவிழ்க்க ஏகாதிபத்தியவாதிகள் சதி செய்கிறார்கள். நாட்டில் பல ஏகாதிபத்திய உளவாளிகள் உள்ளனர். என்னுடைய மனைவிமார்களில் சிலர் வெளிநாட்டு உளவாளிகள். அவர்கள் விபச்சாரிகள்" என்று குற்றஞ்சாட்டி அவர்களைக் கொன்றான். கடைசியாக, அண்டை நாடான டான்சானியா மீது வலியப் போர் தொடுக்கிறான். டான்சானியாவின் படையுடன் இடிஅமின் எதிர்ப்பு "கலகப்படை" போரிட்டு உகாண்டாவைக் கைப்பற்றுகிறது. இடிஅமின் அரபு நாடுகளுக்குத் தப்பி ஓடினான்.

இடி அமீனைப்போல இராணுவப் புரட்சியின் மூலம் ஆட்சிக்கு வந்து வரைமுறையற்ற அதிகாரத்தை எம்ஜிஆர் பெற்றிருக்கவில்லை. தேர்தல்மூலம் ஆட்சிக்கு வந்தார்; நாடாளுமன்ற ஆட்சி முறைக்குட்பட்ட அதிகாரமே எம்.ஜி.ஆரிடம் இருந்தது. இந்த வரம்புக்கேற்ப தமிழகத்தின் இடி அமினாக விளங்கினார் என்று சொல்வது சரியே!

கருணாநிதி ஆட்சியின் லஞ்ச ஊழல், அதிகார முறை கேடுகளைச் சொல்லி தூய்மையான "அண்ணா"வின் ஆட்சிக் காணப் போவதாகச் சொன்னார், எம்.ஜி.ஆர். ஆனால் அவரது ஆட்சியில் தழைத்தோங்கிய லஞ்ச ஊழல், அதிகார முறைகேடு, மோசடி, தில்லுமுல்லு, எத்துவேலை, பித்தலாட்டம் அனைத்திற்கும் மூலகர்த்தாவாக எம்ஜிஆரே விளங்கினார். தமிழகத்தின் சுபீட்சத்திற்குப் பாடுபடுவதாகச் சொல்லி ஏராளமான வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்குவந்தவர் பெரும்பான்மையான மக்களை வறுமைக் கோட்டுக்குக் கீழே தள்ளிவிட்டு இலவசப் பற்பொடி, செருப்பு, புடவை, பிளாஸ்டிக் குடம், சத்துணவு என்று இவரது தானத்திற்குத் தவம்கிடக்கச் செய்தார்.

இடி அமீனையும் விஞ்சிவிடும் ஆடம்பர வக்கிர வாழ்வும், விருந்தும், அரசு விழாக்களும் நடத்தினார். சென்னை மக்கள் வெள்ளத்தில் சிக்கித் தவித்தபோது "சின்ன வீடு" சினிமாப்பார்த்து மகிழ்ந்தார். 12 கோடிக்கு ஆடம்பரமாக உலகத் தமிழ் மாநாடு நடத்தினார். கருணாநிதி கலந்து கொள்கிறார் என்பதற்காகவே அடுத்தமாநாட்டைப் புறக்கணித்து பங்கேற்பவர்களையும் தடுத்தார். இடி அமின் ஆஃபிரிக்காவுக்கே தலைவன் என்று சொல்லிக் கொண்டான்; எம்ஜிஆரோ நோபல் பரிசுக்குரிய மேதையாகத் தன்னைச் சொல்ல வைத்தார். "மாண்புமிகு புரட்சித் தலைவர், பொன்மனச்செம்மல் இதயக்கனி, டாக்டர் எம்ஜிஆர்" என்று தற்புகழ்ச்சியில் மூழ்கித் திளைத்தார். அரசுக் கட்டிடங்களின் எல்லா கல்வெட்டுகளிலும் தன் பெயரே இருக்கவேண்டும் என்று வெறியோடு உத்திரவு போட்



படிப்பகம்

www.padippakam.com

டார்.முகஸ்துதிபாடும் கூட்டத்துக்கு பொன்னும் பொருளும் கொடுத்து வள்ளலென்று பறை சாற்றிக் கொண்டார். ஆசியர்களின் சொத்துக்களைத் தமது எடுபிடிகளுக்கும் முகஸ்துதி பாடுபவர்களுக்கும் இடி அமின் தானம் கொடுத்ததைப் போலவே அரசுச் சொத்துக்களை எம்ஜிஆர் தானம் கொடுத்தார். சென்னை மிருகக்காட்சிச் சாலையிருந்த இடத்தை பழனி பெரியசாமிக்கும், சென்னை வளசரவாக்கத்தை நடிகைகள் அம்பிகா—ராதாவுக்கும் சாராய உடையாருக்கும், மருவத்தூர் ஏரிப்புறம்போக்கை பங்காருவுக்கும் கொடுத்ததைப் போல.

முனு ஆதி, லியாகத் அலிகான், மா.பொ.சி, அங்கமுத்து, உக்கம் சந்து, பழக்கடை பாண்டியன், கோடம்பாக்கம் குமார், சுலோச்சனா சம்பத், கல்யாணி ராமசாமி, அனகாபுத்தூர் ராமலிங்கம், பாலகுருவ ரெட்டியார் இப்படி ஒரு பெரிய ஒட்டுண்ணிக் கூட்டத்துக்கு வாரியங்கள், அரசு நிறுவனங்களின் தலைவர்களாக்கி அரசாங்கப்பணத்தைச் சுருட்டிக்கொள்ள ஏற்பாடு செய்தார். ஜெயலலிதா, வெண்ணிற ஆடை நிர்மலா, கோவை முதலாளி வரதராஜுலு போன்ற அரசியல் வாடையே இல்லாதவர்களுக்கும் பதவிகளைத் தானம் செய்தார்.

மணியன், டி.ஆர்,ஆர், சண்முகவேல், சோலை, வலம்புரிஜான் ஆகிய எடுபிடிகள்; பண்ருட்டி, ரங்காச்சாரி, வி.பி.ராமன் ஆகிய அரசியல் ஆலோசகர்கள்; மோகன்தாஸ் தலைமையில் ஒரு உளவுப்படை, தேவாரம் தலைமையில் ஒரு அதிரடிப்படை—இடி அமீனை சுற்றிஒரு கூட்டம் அமைந்ததைப் போல இவர்கள் எம்ஜிஆரைச் சுற்றியிருந்தனர்.

நாடாளுமன்ற அரசியல் எதிரிகளை ஒழிப்பதற்கு—இந்திராவுக்குக் கருப்புக் கொடி காட்டியவர்கள் மீது துப்பாக்கிச் சூடு, தனது மந்திரி சபையில் இருப்பவரையும் சேர்த்து கொலைக் குற்றச்சாட்டு, இந்தி எதிர்ப்பு போராட்டம் செய்ததற்கு தேசத்துரோகக் குற்றச்சாட்டு, சட்டமன்ற பதவிப்பறிப்பு, வெடிகுண்டு சதிவழக்கு—என்றுபல வக்கிரமான வழிகளை மேற்கொண்டார். புரட்சியாளர்களை ஒழிப்பதற்கு மோகன்தாஸ்—தேவாரம் படையை ஏவிப் படுகொலை செய்தார். தனது ஆட்சியை விமர்சிக்கும் பத்திரிக்கைகள்மீது குண்டர்களை ஏவித் தாக்கினார்; சபாநாயகர் பாண்டியனை ஏவி அரசியல் எதிரிகளை சிறையிலிட்டார்; நக்சலைட்டுகள் மீதான அடக்குமுறையை விசாரிக்கப்போன பத்திரிக்கையாளர்களைத் தேவாரத்தை விட்டுத் தாக்கினர். தனது அரசுக்கு விரோதமாகக் தீர்ப்புச் சொல்லும் நீதிபதிகளையும் தனது அரசை விமர்சிக்கும் சட்ட மன்ற உறுப்பினர்களையும் உளவு் பார்க்கச் செய்தார்.

வெளி நாட்டிலிருந்து வந்து உகாண்டாவில் குடியேறியவர்களைத்தான் இடிஅமின் நாடு கடத்தினான்.எம்ஜிஆர் தமிழர்களையே நாடு கடத்தும் திட்டம் கொண்டு வந்தார். பெரியாரின் வாரிசு, பகுத்தறிவு பாரம்பர்யம் என்று சொல்லிக் கொண்டே குறி கேட்டுத்தான் எந்தச் செயலையும் செய்தார். கோஷ்டி பூசலால் ஆட்சிக்கும் கட்சிக்கும் நெருக்கடி வந்த போதெல்லாம் மூகாம்பிகை அம்மணியிடம்செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். சிறை—சித்திரவதை—படுகொலைகளில் இந்தியாவிலேயே தமிழகத்தை முதலிடத்துக்குக் கொண்டு வந்தார். தனது மனைவிமார்களில் சிலர் அந்நிய உளவாளிகள் என்று அறிவித்து கொன்றான் இடிஅமின். எம்ஜிஆர் அந்த அளவு போகவில்லை. பத்திரிக்கைகளில் ஒரு விளம்பரம்கொடுத்தார்.



ம:.பியா குண்டர் தலைவன் வராகராஜு முதலியாரின் மகன் மணவிழாவில் எம்ஜிஆர்-ஜானகி. சாராய உடையார், ம:.பியா முதலியார் போன்றவர்களோ ஜெகஜ்ஜய கூட்டாளிகள்.

"அரசு நிர்வாகத்தில் சம்பந்தமில்லாத யாருடைய தலையீட்டையும், குறுக்கீட்டையும் நான் எப்போதும் விரும்புவதில்லை. எனது மனைவியாக இருந்தாலும் அல்லது எனது உறவினர் என்று சொல்லிக் கொள்பவராக இருந்தாலும் அவர்களுக்கும் இது பொருந்தும். அமைச்சர்களே ஆனாலும் சரி, தலைமைச் செயலாளர் அல்லது உயர் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட, ஏனைய யாராக இருந்தாலும் சரி என்னுடைய அபிப்பிராயத்தை அறிந்து நடந்து கொள்ள வேண்டும்."

எம்ஜிஆர் ஆட்சியின் ஒவ்வொரு அசைவிலும் அதன் அருவருக்கத்தக்க இழிவான அம்சம் முழுவதுமாக வெளிப்பட்டு போன பின்னும் எம்ஜிஆரே நோயுற்று நடைபிணமான பின்னும் மாற்றுத் தலைமை தருவதில் ஓட்டுக் கட்சிகள் அனைத்துமே தோல்வியுற்றுப் போனதால் கடைசியாக எம்ஜிஆர் ஆட்சியிலிருந்து தூக்கி எறியப்படவில்லை. அதிகாரத்தை அவர் முழுமையாக அனுபவித்தபிறகு சாவுதான் அவருடைய ஆட்சிக்கு முடிவு கட்டியது.

எம்ஜிஆரின் பத்தாண்டு கால ஆட்சியின் பாசிச, சேடிச, கோமாளித் தனங்களை அவருடைய "தோழமை"க் கட்சிகளே, பத்திரிக்கைகளே நியாயப்படுத்த முடியாமற் தவித்த சம்பவங்கள் ஏராளமாக உண்டு. பத்தாம் பசலி வேசம் கட்டிக் கொண்டு மறைமுகமாக அவரை ஆதரித்த துக்ளக், ஆனந்தவிகடன், கல்கி, தினமணி, இந்து, எக்ஸ்பிரஸ் போன்ற பத்திரிக்கைகளும், போலிக் கம்யூனிஸ்டுகளும்கூட அவற்றைக் "கண்டித்த" சம்பவங்களும் ஏராளமாக உண்டு. எம்ஜிஆரின் பரம எதிரியான கருணாநிதியே எம்ஜிஆரின் சாவுக்குப்பிறகு நிறத்தை மாற்றிக் கொண்டு நீலிக் கண்ணீர் வடிக்கும் போது இவர்கள் குடம்குடமாக கண்ணீர் கொட்டுவது அதிசயமில்லை.

ஆனால் இந்தப் பத்திரிக்கைகளும், கட்சிகளின் அறிக்கைகளுமே எம்ஜிஆர் ஆட்சியின் பாசிச, சேடிச, கோமாளித்தனங்களுக்கு ஆதாரங்களாக ஆவணங்களாக விளங்குகின்றன. போலித்தனமான கண்ணீர்த் துளிகள் எம்ஜிஆர் ஆட்சியின் இரத்தக் கறைகளைக் கழுவிட அனுமதிக்க முடியுமா? பத்தாண்டு எம்ஜிஆர் ஆட்சியில் அவரும் அவருடைய கட்சியினரும் அடித்த பகற்கொள்ளை எம்ஜிஆரின் பிணத்தோடு சேர்த்துப் புதைக்கப்படவில்லை. அந்தக் கட்சி எம்எல்ஏக்களையே விலைபேசிக் கொண்டிருக்கின்றன. எனவே எம்ஜிஆர் உடல்மீது தெளித்த பன்னீர்த்துளிகள் அவரது லஞ்ச ஊழல், அதிகார முறைகேடாகிய கறையைக் கழுவி விடவில்லை.

மூன்று தவணைகளில் பத்தாண்டுகள் ஆட்சியிலிருந்தார் பாசிச எம்ஜிஆர். முதல் மூன்றாண்டுகளில் போலீசையும் அடக்கு



படிப்பகம்

www.padippakam.com

முறைச் சட்டங்களையும் ஏவி மாணவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், ஆசிரியர்—அரசு ஊழியர்கள் ஆகிய அனைத்துப் பிரிவினரையும் அடக்கி ஒடுக்கி விட்டார். கடைசியாக, சங்கம் வைக்கும் உரிமைக்காகப் போராடிய போலீசார் மீதே மத்தியப்படையை ஏவி ஒடுக்கினார். தமிழகத்து மக்களின் வெறுப்பை பெற்றிருந்த பாசிச எம்ஜிஆர் சந்தர்ப்பவாத அரசியல் பித்தலாட்டமும் அம்பலப்பட்டு போகவே 1980 நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வியடைந்தார். மத்தியில் ஆட்சிக்கு வந்த இந்திரா எம்ஜிஆரின் ஆட்சியைக் கவிழ்த்து அதிகாரத்தைப் பிடுங்கிக் கொண்ட போது எம்ஜிஆர் நிலைகுலைந்து போனார்.

சினிமாவிலே வீரதீரமாகச் சண்டையிட்ட எம்ஜிஆர் இரண்டு கண்களிலும் 'கிளிசரினை' ஊற்றிக் கொண்டு தமிழக மக்களிடம் குடம் குடமாகக் கண்ணீர் வடித்தார். விவசாய சங்கத்தலைவரிடமும், போலீசு சங்கத் தலைவரிடமும் மண்டியிட்டார். மன்னிப்புக் கேட்காத குறையாக சரணடைந்தார். ஏராளமாகப் பொய்யான வாக்குறுதிகளை வீசி மீண்டும் ஆட்சியைப் பிடித்தார். அத்தனையையும் காற்றில் பறக்க விட்டு, அதிகார மமதை தலைக்கேற மீண்டும் அந்த பாசிச வேதாளம் தமிழக மக்கள் மீது பாய்ந்தது. எம்ஜிஆர் குண்டர் படையையும், போலீசையும் ஏவி எல்லாத்தரப்பு மக்கள் இயக்கங்களையும் பூரணமாக அடக்கி ஒடுக்கினார். ஓட்டுக்கட்சி அரசியல்எதிரிகளையும், பத்திரிக்கைகளையும் கூட விட்டுவைக்கவில்லை. இதிலே வெற்றி பெற்ற பிறகு தமிழகத்தைத் தனது கட்சியானது "ஊழல் சாம்ராஜ்யமாக" மாற்றுவதில் முழு மூச்சாக இறங்கினார். தனது பினாமிகளையும், சாராய சிற்றரசர்களையும், தனது புகழ்பாடும் ஒட்டுண்ணிக் கூட்டத்தையும் உருவாக்கிக் கொண்டார்.

தனது அரசியல்—அதிகார அட்டூழியங்களுக்கும், பகற்கொள்ளைக்கும் வசதியாக இந்திராவின் இளைய பங்காளியாகவும் பாசிச பாதந்தாங்கியாகவும் மாறினார். லஞ்ச ஊழலும், பாசிச அடக்குமுறையும் நிறுவனமயமானது—ஆட்சியின் ஒழுங்குவிதியானது. அதன் பிறகு அவரது ஆட்சியின் அக்கிரமங்களைத் தட்டிக் கேட்க 'யாரும்' துணியவில்லை. நிர்வாக ஸ்தம்பிப்பை பற்றித்தான் முனகினார்கள். அதுவும் எம்ஜிஆர் நோயுற்றநடை பிணமான நிலையில்மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்ததும் மறைந்து போனது. பொதுச் சொத்துக்களை சூறையாடுவதற்கான உரிமை பெற்றவர்களாக எம்ஜிஆரின் எடுபிடிகள் மாறினர். சட்டமன்றத்துக்குள் சர்வாதிகாரி பாண்டியனும், வெளியே மோகன்தாஸ்—தேவாரம் கும்பலும் காட்டுமிராண்டித்தனமாக ஆட்சி நடத்தினர். சாதி, மதவெறியர்களும், சாராய—மஃபியா—கடத்தல் தலைவர்களும் கட்டுப்பாடற்ற கொள்ளையில் இறங்கினர்.

எம்ஜிஆரின் பத்தாண்டு ஆட்சியில் ஏற்பட்ட கருப்பு சிவப்புபுள்ளிகளை வெளிச்சம் போட்டுக் காட்டினாலே போதும். அவரது பாசிச, சேடிச கோமாளித்தனங்கள் புரியும்.

✱ எம்.ஜி.ஆர் ஆட்சிக்கு வந்த ஒரு சில மாதங்களிலேயே, அவசர நிலை ஆட்சியின் போது பறிக்கப்பட்ட உரிமைகளைக் கோரியும், சில சலுகைகளுக்காகவும் மாணவர் போராட்டங்கள் வெடித்தன. மதுரையில் அவர்கள் நடத்திய அமைதியான ஊர்வலத்தின்மீது போலீசும் எம்ஜிஆர் ரசிகர்களும் பாய்ந்து தாக்கினர். மதுரை கலெக்டரே இரும்புத் தொப்பியும் கைத்தடியும் ஏந்தி மாணவர்களை அடித்து நெறுக்கினார். தப்பி ஓடிய மாணவர்களின் விடுதிகளுக்குள்ளும் புகுந்து வெறியாட்டம் போட்டனர். நூற்றுக் கணக்கான மாணவர்களுக்கு ரத்த காயங்கள், 850பேர் கைதாகிபொய் வழக்குகள்.

அதைத் தொடர்ந்து தூத்துக்குடி மாணவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம், மாநிலக் கல்லூரி நெல்லை இந்திய மருத்துவக் கல்லூரி, தியாகராய கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் போலீசாலும் எம்ஜிஆர் ரசிகர்களாலும் தாக்கப்பட்டனர். பல்கலைக் கழகம் நோக்கி ஊர்வலம் போனபோது ஊழியர்களாலும், போலீசாராலும் தாக்கப்பட்டனர்.

சிறுபான்மையினரின் கல்லூரிகள் என்கிறபெயரில் சென்னை எஸ்.ஐ.இ டி கல்லூரி மாணவர்களும் புதுக்கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் ஒடுக்கப்படுவதையும், நிர்வாக ஊழலையும் எதிர்த்துப் போராடினர். நிர்வாகத்துடன் சேர்ந்து கொண்டு எம்ஜிஆர் அரசு மாணவ—மாணவிகளைத் தாக்கவும், ஆசிரியர்களைப் பழி வாங்கவும் துணைபோனது. எல்லாவற்றுக்கும் மேலாக தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான எம்.சி. ராஜா விடுதியின் ஊழல்களை எதிர்த்தும், கல்,மண்கலந்தஉணவு,அடிப்படை வசதி மறுப்பு ஆகியவற்றை எதிர்த்தும் அவர்கள் பலதடவைமுறையிட்டனர். கடைசியாக அமைதியாக ஊர்வலம் போன மாணவர்களை போலீசை ஏவி தாக்கிப் படுகாயப் படுத்தினர். தப்பி ஓடி விடுதிக்குள் புகுந்த மாணவர்களை எம்ஜிஆர் ரசிகர்கள் இரும்புக் கம்பிகள், சைக்கிள்செயின், சோடாப்பாட்டில்கள் சகிதமாகப் புகுந்து தாக்கினர். விடுதியைச் சூறையாடி, இரத்தக் கறைகளாக்கினர்.

● 1974க்குப் பிறகு ஊதிய உயர்வே கண்டிராத பஞ்சாலைத் தொழிலாளர்கள் 77—78இல்வேலை நிறுத்த தாக்கீது கொடுத்தபோது எம்ஜிஆர் அரசு கண்டுகொள்ளவேயில்லை. வேலை நிறுத்தம் தொடங்கிய இரண்டாம் நாளே போராட்டத்தை சீர்குலைக்கும் நோக்கத்தோடு பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விடுவதாக முடிவு செய்தது. இ.எஸ்.ஐ. அலுவலகத்தில் குழுமிய தொழிலாளர்கள்மீது தடியடிப் பிரயோகம் நடத்தியது—நிர்வாகத்துடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு ஆயிரக்கணக்கான தொழிலாளர்மீது பொய் வழக்குப் போட்டது, பிரச்சினை பேசித் தீர்க்கப்பட்ட போதும், பலமுறை முறையிட்டும் பொய் வழக்குகளை விலக்கிக் கொள்ள மறுத்தது. தொழிலாளர்களுக்கு எதிரான எல்லா வழக்குகளையும் விலக்கிக் கொள்ளப் போவதாக திடீரென்று "சுதந்திர"தினத்தன்று எம்ஜிஆர் அறிவிப்பு செய்தார். ஆனால் போலீசார் எந்த வழக்கையும் வாபஸ் வாங்கிக் கொள்ளவில்லை.

தொழிலாளர்கள், மாணவர்கள், விவசாயிகள் யார் போராடினாலும் சட்டம் அதன் வேலையைச் செய்யும் என்று மிரட்டினார் எம்ஜிஆர். ஆனால் இந்திரா கைது செய்யப்பட்டதையொட்டி காங்கிரசு குண்டர்கள் வெடிகுண்டு வீசியும், பஸ்களைத் தாக்கியும், பலரைப் படுகொலை செய்தும் வெறியாட்டம் போட்டபோது கைதானவர்களை விடுதலை செய்தார். 1972இல் எம்ஜிஆர் தனிக்கட்சி அமைத்த பிறகு போடப்பட்ட எல்லாஅரசியல் வழக்குகளையும் மறுபரிசீலனை செய்ய உத்தர விட்டார். ஆனால் பஞ்சாலைத் தொழிலாளருக்கு எதிரான பொய்வழக்குகள் வாபசாகவே இல்லை.

✱ 1978 அக்டோபரில் பஸ் தொழிலாளர் போராட்டம் தன்னெழுச்சியாக வெடித்தது. பஸ்

புதிய ஜனநாயகம் டிசம்பர்—(16—31) இதழில் "டாக்டர் அம்பேத்கார்: முதலாளித்துவ சீர்திருத்தவாதியா? புரட்சியாளரா?" என்கிற கட்டுரைவெளியிட்டிருந்தோம். அதற்காக புதிய ஜனநாயகத்தைக் கடுமையாகச் சாடி சில கடிதங்கள் வந்திருக்கின்றன. இவை போன்ற அவதூறுகள் புதிய ஜனநாயகம் வாசகர்கள் சிலரிடம் பரப்பப்பட்டிருக்கக் கூடும். எனவே வரும்தழில் பதிலளிக்கிறோம்.




படிப்பகம்

www.padippakam.com

ாழிலாளர் சங்கங்களுடன் பேச்சு
ர்த்தை நடத்தி உடன்பாடு
ணாது ஒருதலைப் பட்சமாக
றைந்த பட்சபோனஸ் தருவதை
எம்ஜிஆர் அரசுவழக்கமாகக்
ாண்டிருப்பதை எதிர்த்து இரண்
நாட்கள்தான் வேலை நிறுத்தம்
ய்தனர். அதற்குள் "மினிமிசா"
யும் அவசர சட்டத்தையும்
ஜிஆர் அரசு ஏவியது. 500ப
ாழிலாளர்கள் கைது செய்யப்பட்
ார். கருங்காலிகளையும், போலீ
யும், எம்ஜிஆர் ரசிகர்களையும்
த்து பஸ்கள் ஓட்டப்பட்டன.
கேளை நிறுத்துபவர்களைக் கண்
ும் சுட உத்திரவு போட்டார்.
லை நிறுத்தத்தில் கலந்துகொள்
ர்கள் மட்டுமல்ல, அதை ஆதரிப்
ர்களையும், நிதி அளிப்பவர்
ளையும் கூட சிறையிலடைக்கும்
டம் கொண்டு வந்தார். 'பொது
கள் பார்த்துக் கொள்வார்கள்'

தலைமையை சென்னை—பாடி டிவிஎஸ் தொழிலாளர்கள் தேர்ந்தெடுத்தனர். மதுரையிலிருந்து குண்டர் படையை இறக்குமதி செய்து ஆலைக்குள்ளேயே தொழிலாளர்களைத் தாக்கியது நிர்வாகம். தொழிலாளருக்குப் பாதுகாப்பு என்கிற பெயரில், பாடி—வில்லிவாக்கம் — அம்பத்தூர் தொழில் வட்டாரமெங்கும் போலீஸ் முகாம்கள் அமைக்கப்பட்டன. டி.வி எஸ். ஆலைக்குள் நிர்வாகத்தின் குண்டர் படை திரட்டப்பட்டது. நான்கு மாதக் கதவடைப்புக்குப் பிறகு, 85ப தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்த பிறகு நிர்வாகத்திடம் மன்னிப்புக் கோரும் நிபந்தனைப் பத்திரத்தில் கையொப்பமிட்ட தொழிலாளர்கள் மட்டும்வேலைக்கு அனுமதிக்கப்பட்டனர். நிர்வாகத்தின் குண்டர் படையும், போலீசும் தொழிலாளர்களை மிரட்டி அரசு



குடியை எதிர்த்து நடத்திய ஊர்வலத்தில் எம்.ஜி.ஆர். பேசுகிறார்.

ன்கிற பெயரில்—எம்ஜிஆரின்
ண்டர்படை அடையாள அட்டை
ளும், வெள்ளைச் சட்டைகளும்
ணிந்த தொண்டர்கள் என்கிற
யரில்—பஸ் தொழிலாளர்களுக்கு
ிராக ஏவிவிடப்பட்டனர். அதன்
கு பத்தாண்டுகளாக எம்ஜிஆர்
சு ஒருதலைப்பட்சமாக அறி
வித்துத் தரும் குறைந்த பட்ச
ானசுதான் கொடுக்கப்படுகிறது.

* பஸ்தொழிலாளர் போராட்
த்தின் போது தீவிரமாக நடந்து
காண்டிருந்தன டி. வி. எஸ்—
ஐ. சைக்கிள்ஸ் தொழிலாளர்
ாராட்டங்கள். ஆரம்ப காலத்தி
ருந்து தங்கள் மீது நிர்வாகம்
ணித்திருந்த கருங்காலி காங்கிர
ன் ஐ என்.டி.யு.சி தொழிற்சங்கத்
லைமையைத் தூக்கியெறிந்து
ாலிக் கம்யூனிஸ்டு வி பி. சிந்தன்

பஸ்களில் கடத்திப் போய் உற்பத்தியைத் தொடங்கினர்.

டி.வி.எஸ் ஆலைக்கு வெளியே போடப்பட்ட தொழிலாளர் பந்தல்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. போராடும் தொழிலாளர்களை குண்டர்கள் தாக்கி அரிவாளால் வெட்டினார்கள். போலீசார் அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தனர். டி.வி.எஸ் பாணியைத் தொடர்வது என்று மற்ற முதலாளிகள் தீர்மானிக்கவே அம்பத்தூர் டி. ஐ. சைக்கிள்ஸ் ஆலையில் தொழிலாளர்கள் தாக்கப்படுவதும், கதவடைப்பும் தொடங்கியது. சென்னை நகரத் தொழிலாளர்கள் பொது வேலை நிறுத்தம் செய்தனர். மூடியிருந்த பஞ்சாலைகளைத் திறக்கவும் "அத்தியாவசிய பணித்துறை" என்கிற கருப்புச் சட்டத்தை எதிர்த்தும் கோரிக்கைகள் வைக்கப்பட்டன.

இது தனது அரசுக்கு எதிரான போராட்டம் என்று அஞ்சிய எம்ஜிஆர் பொது விடுமுறைவிட்டு பேச்சுவார்த்தை நடத்த சம்மதித்தார். அப்போது வந்த மதுரை மாநகரத் தேர்தலில் நாற்காலி பிச்சை வாங்குவதற்காக பேரம் பேசிய போலிக்கம்யூனிஸ்டுகள் போராட்டத்தை இழுத்தடித்தனர்; எம்ஜிஆர்மீது பிரமைகளை வளர்த்தனர்.

மதுரை மாநகரத்தேர்தலுக்குப் பிறகு டி.வி.எஸ், டி.ஐ. சைக்கிள்ஸ் தொழிலாளர் பிரச்சினையைத் தீர்க்காமல் அவர்களை ஒடுக்குவதில் இறங்கியது எம்ஜிஆர் அரசு. 1978 அக்டோபர் 16 இல் மாநில மத்திய போலீசை ஏவி தடியடி, கண்ணீர் புகை குண்டு வீச்சு, துப்பாக்கிச் சூடு நடத்தி அமைதியாக மறியல் செய்த தொழிலாளர்கள் மீது பாய்ந்தது. ஆத்திரமுற்று வேலை நிறுத்தத்தில் இறங்கி வெளியேற முயன்ற "டன்லப்" தொழிலாளர்கள் மீது தடியடி நடத்தியது. "டன்லப்' தொழிற்சங்க அலுவலகத்திலிருந்த குசேலர், கோபு, சுப்பு ஆகியவர்களைக் கைது செய்து கிரிமினல் வழக்குகள் போட்டது.

போராட்டத்தை உடைக்கும் எம்ஜிஆர்—டி.வி.எஸ் முதலாளியின் அராஜக வேலைகளுக்கு எதிராக காந்திய கம்யூனிஸ்டு சங்கமான சி ஐ.டி.யு. தலைவர் அரிபட் மற்றும் இருவர் உயர்நீதிமன்றத் தருகே உண்ணாவிரதம் இருந்தனர். ஐந்தாம் நாள் "வலது" கம்யூனிஸ்டு தொழிற்சங்கத் தலைவர்கள் கோபு, சுந்தரம் தலைமையில் எம்ஜிஆரைச் சந்திக்க கோட்டை நோக்கி ஊர்வலமாகப் போனார்கள் டி ஐ. சைக்கிள்ஸ் தொழிலாளர் குடும்பத்தினர். அவர்களை வழிமறித்து கண்ணீர் புகை குண்டு வீசி தடியடி நடத்தியது மத்திய ரிசர்வ் போலீஸ் படை. பெண்களும், குழந்தைகளும், போலிக் கம்யூனிஸ்டு தலைவர்களும் படுகாயமுற்றனர். அதே சமயம்உயர் நீதி மன்றத்தருகே உண்ணாவிரதமிருந்தவர்களை எம்ஜிஆரின் ரசிகர் படை தாக்கியது. 45 நிமிடம் வெறியாட்டம் போட்டு, போலீஸ் நிலையத்துக்கு அருகாமையில் இருந்த உண்ணாவிரதப் பந்தலைக் கொளுத்தியது. தொழிலாளர்களும் தலைவர்களும் சிதறி ஓடினர்.

எம்ஜிஆர் அரசின் இந்தக் கொலை வெறியாட்டத்தைக் கண்டித்து 1978 அக். 28ந் தேதி தமிழகம் தழுவிய கடையடைப்பு நடத்துவதாக காங்கிரசு மற்றும் ஜனதா தவிர அனைத்துக் கட்சிகளும்முடிவு செய்தன. அப்போது இந்திராவுக்கு தேர்தல் பிரச்சாரம் செய்யப் போயிருந்த எம்ஜிஆர் ஓடோடி வந்து "இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குவதாக" சபதம் ஏற்றார். தந்தி கொடுத்து எம்.பி; எம்.எல்.ஏ மற்றும்



படிப்பகம்

www.padippakam.com

கட்சித் தலைவர்களைக் கூட்டினர். கடையடைப்பை முறியடிப்பதாக யுத்தப் பிரகடனம் செய்தார். 10 நாட்களுக்குக் கல்லூரிகள் மூடப்பட்டு வேறு மாநில—மத்திய போலீசுப் படைகள் குவிக்கப்பட்டன. 10,000 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

எதிர்க்கட்சி எம்.எல்.ஏ, எம்பிக்கள், தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். சிறு வியாபாரிகள், சிறு கைத் தொழிலாளர்கள், பெண்கள் உட்பட அனைத்துப்பிரிவினரையும் கடைஅடைப்பை முறியடிக்கும்படி பத்திரிக்கைகள் வானொலியில் விளம்பரம், பிரச்சாரம் நடந்தது. மன்னார்குடியில்போலீஸ்துப்பாக்கி சூட்டிற்கு 22 பேர் காயமடைந்தனர். பல நகரங்களிலும் அதிமுக குண்டர்படை வெறியாட்டம்போட்டது. ஆனாலும் மாநிலந் தழுவிய கடையடைப்பு வெற்றிகரமாகநடந்தது. அதன் பிறகு ஒட்டுக் கட்சித் தலைமை தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்து துரோகமிழைத்தது.

● இனி "டி.வி.எஸ்.—டி.ஐ. சைக்கிள்ஸ்" பாணியிலே தொழிலாளர்களை ஒடுக்குவது என்று முதலாளிகளும் எம்ஜிஆர் அரசும் தீர்மானித்தது. ஆளும் கட்சி தலைமையிலான "அல்ட்ரா மரைன் " ஆலைத் தொழிலாளர்களின் போராட்டம்கூட பலாத்காரமாக அடக்கி ஒடுக்கப்பட்டது. அதே கதிதான்போராடியகோவைலட்சுமி மெஷின்டூல்ஸ், மேட்டூர்மில்ஸ், மின் வாரியத் தொழிலாளர்களுக்கும் நேர்ந்தது. அதன் பிறகு குறிப்பிடத்தகுந்த அளவு உறுதியாக நடந்தது திருச்சி "சிம்கோ மீட்டர்ஸ்" ஆலைத் தொழிலாளர் போராட்டம் தான். இங்கும் கருங்காலி ஐ என்.டி.யு.சியின் தலைமையும், துரோக ஒப்பந்தமும்தொழிலாளர்மீது திணிக்கப்பட்டது. அதை எதிர்த்து சி.ஐ.டி யு தலைமையில் தொழிலாளர்கள் போராடினர்.

டி.வி.எஸ்.—டி ஐ. சைக்கிள்ஸ் போராட்டங்களை முறியடித்த மமதை, அமெரிக்காவில் தனக்கு "ராஜ உபசாரம்" செய்த "சிம்கோ மீட்டர்ஸ்" முதலாளியிடம் விசுவாசம் ஆகியவை காரணமாக போலீசையும், அதிமுக வெண் சட்டைப் படையையும் "சிம்கோ" தொழிலாளர்மீது எம்ஜிஆர் ஏவினார். தொழிலாளாகள் மட்டுமின்றி சங்கத் தலைவர் உமாநாத் வீட்டிற்குள் வெடிகுண்டு வீசித் தாக்கினார்கள். திருச்சி நகர மக்கள் பலர் தொழிலாளர் பக்கம் நின்று ஒத்துழைத்தனர். தமிழகத்தின் பலபகுதி தொழிலாளர் ஆதரவு கிடைத்தது. போலிக் கம்யூனிஸ்டுகள் சட்டமன்றப்"போராட்டங்கள்" நடத்தினர். நான்கு மாத விடாப்பிடியான போராட்டத்திற்குப் பிறகு ஊதிய உயர்வுக்கு அரசும் நிர்வாகமும் ஒப்புக் கொண்டன. ஆனாலும் ஐ.என்.டி.யூ.சி ஒப்பந்தம் நீடித்தது. முன்னணித் தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டனர்.

● தொழிலாளர்களையும், மாணவர்களையும் ஒடுக்கிய பிறகு விவசாயிகள் பக்கம் திரும்பியது எம்ஜி ஆரின் பாசிச பார்வை. எம்ஜி ஆரின் தொகுதியாயிருந்த அருப்புக் கோட்டை அருகே வாகைகுளம் கிராம விவசாயிகள் ராட்சத ஆழ்கிணறு தோண்டுவதற்கு எதிராகப் போராடினர். அவர்கள்மீது போலீசு துப்பாக்கி சூடு நடத்தி 2பெண்கள் உட்பட 5 பேரைச் சுட்டுக் கொன்றது. அதன் பிறகு வழக்கம் போல இறந்து போனவர் குடும்பத்துக்குத் தலா 6000 நிதியும், விசாரணைக்கமிஷனும் அறிவித்தார் எம்ஜிஆர். ஏற்கனவே பல கோரிக்கைகளை வைத்து போராடி வந்தநாராயணசாமி நாயுடு தலைமையிலான விவசாயிகள் சங்கம் மாநிலந் தழுவிய கடையடைப்பு நடத்தியது. கடையடைப்பபை முறியடிக்கும் வெறியுடன் போலீசைக் குவித்து பஸ்களை ஓட்ட முயன்றது எம்ஜிஆர் அரசு. வேடசெந்தூர் உட்பட பல கிராமங்களில் நடந்த துப்பாக்கி சூட்டிற்கு 14 விவசாயிகள் பலியாயினர். நெல்லை—சங்கரன் கோவில் அருகே ஒரு துணை போலீஸ் அதிகாரி விவசாயப் பெண்களிடம் அத்துமீறி நடந்து கொண்டதால் ஆத்திரமுற்று விவசாயிகளால் அடித்துக் கொல்லப்பட்டார்.

அதன் பிறகு வெறித்தனமாக விவசாயிகள்மீது பாய்ந்தது எம்ஜிஆரின் போலீசு. சென்னை—திருவள்ளூர் அருகே வள்ளியூர் கிராமத்தில் வீடுகளுக்குள் புகுந்து கிழவிகள், சிறுமிகள் உட்பட பெண்களை வெளியே இழுத்துப் போட்டுமிருகத்தனமாகத் தாக்கியது. பெண்களை லாரிகளில் ஏற்றி, கொளுத்தும்வெயில் உணவு, தண்ணீரின்றி நாள் முழுவதும் நிறுத்தித் துன்புறுத்தி சென்னை மத்தியசிறையில்அடைத்தது. தாக்குண்ட பெண்களைத் தனது பெண் அமைச்சருடன் போய்ப் பார்த்து ஆறுதல் சொல்வி ஏய்க்க முயன்றார் எம்ஜிஆர். போலீசு அவர்களைக் கற்பழிக்காது நல்லமுறையில்நடந்துகொண்டதற்குப் பாராட்டினார். பெண்களை முன்னிறுத்தும் கோழைகள் என்று ஒரு விவசாயச் சங்கத் தலைவர்கள்மீது கொலைக்குற்ற வழக்குப் போட்டார். இராணுவத்தை வரவழைத்து போராட்டத்தை ஒடுக்குவதாக மிரட்டினார்.

● தனதுபாசிச ஒடுக்குமுறைகளில் ருசி பார்த்த எம்ஜிஆர் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் மீது பாய்ந்தார். ஊதிய உயர்வு, ஓய்வு வயது அதிகரிப்பு மற்றும் பிற

சலுகைகளுக்காக 1978 மார்ச்
மாநில அரசுஊழியர்கள் போராடி
போது தனது கட்சி தலைமை
போட்டி—கருங்காலி சங்கத்
தொடங்கினார். 30 நாட்
வேலை நிறுத்தம் நடந்தது. "வி
சாயப் பெண்களுக்கு மானத்
காத்துக் கொள்ள துணிசு
இல்லை, உங்களுக்குஊதிய உயர்
வேண்டுமா? பொதுமக்கள் பா
துக் கொள்வார்கள்" என்று
சரித்தார். பொதுமக்கள் என்
போர்வையில் அதிமுக குண்
களை ஏவி அரசு ஊழியர்களை
தாக்க முயன்றார். ஆயுதங்களுட
வந்த குண்டர்களைப் பிடித்
கொடுத்தபோதும் போலீசார்
வடிக்கை எடுக்கவில்லை. வே
நிறுத்தத்தை எதிர்க்கும்படி அ
ஊழியர்களின் மனைவிமார்களு
கோரிக்கை விட்டார், எம்ஜிஆ

கைதுகள், வேலை நீக்கங்கள்,
காலிக ஊழியருக்கு "டிஸ்மிஸ்
கட்டாய ஓய்வு தருவது என்று
வாங்குவதில் ஈடுபட்டார். வே
நீக்கம் செய்து விட்டு புதிய ஊழி
களை எடுக்கப் போவதாக அறி
புகள் கொடுத்தார். அரசு ஊழி
கள்—ஆசிரியர்கள் கூட்டு உருவ
உறுதிப்பட்டவுடன் சற்றுப் பி
வாங்கிக் கொண்டு சிறு சலு
களை அறிவித்தார். ஆனாலும் போ
ராட்டத்துக்குத் தலைமையே
சிவ. இளங்கோ தலைமையில
கும்பலை விலைக்கு வாங்குவ
வெற்றி பெற்றார்.

● பரந்துபட்ட மக்கள்
போராட்டங்களை ஒடுக்குவ
காக யாரைப் பயன்படுத்தினா
அந்தப் போலீசாருக்கு எதிராக
எம்.ஜி ஆரின் தாக்குதல்திரும்பிய
பல்வேறு மாநிலங்களில் போலீ
சங்கங்கள் உருவானதைத் தொ
டர்ந்து தமிழகப் போலீசா
நைனார்தாஸ் மற்றும் பிரிட்டோ
தலைமையில் சங்கம் அமைத்த
ஆத்திரமடைந்த எம்ஜிஆர்அ
தடை செய்துவிட்டு தானே த
கருங்காலிகளைக் கொண்ட மூல
சங்கங்களை அமைத்தார். அ
கீழ்வர மறுத்த போலீசார் போரா
தில் குதித்தனர். மத்திய ரிச
படையை வைத்து போரா
போலீசாரை வேட்டையாடின
எம்ஜிஆர். போலீஸ் குடியிரு
களில் புகுந்து பெண்கள், குழந்
கள் தாக்கப்பட்டனர். சங்கத்த
வர்கள் தலைமறைவாயினர். அ
களை வேலை நீக்கம் செய்
எம்ஜிஆர். சங்கம் வைக்கும் முய
யை முறியடித்தார்.

இவர்களை மட்டுமல்ல, வ
கறிஞர்கள், கல்லூரிப் பேராசிரி
கள், மருத்துவர்கள் போ
அனைத்துப் பிரிவு மக்களை
இந்த முறையிலே மிரட்டிப் பண
வைத்தார்.



படிப்பகம்

www.padippakam.com

● மூன்றாண்டுகள் இப்படி
சிச வெறியாட்டம் நடத்திய
ுகு—1980 ஜனவரி நாடாளு
ன்றத் தேர்தலில் தோற்றதினால்
திகாரத்தை இழந்துவிடும் குளிர்
ய்ச்சல் கண்டு நடுங்கினார், எம்
ஆர். "அரசியலையே விட்டு
விடுவேன், மீண்டும் நடிக்கப்
ாகிறேன்" என்று ஒவ்வொரு
ாதுக் கூட்டத்திலும் அழுதார்.

ஜிஆர் ஆட்சியை இந்திரா நீக்கி
ட்டு சட்டமன்ற இடைத்தேர்தல்
றிவித்தார். எம்ஜிஆருக்கு நடுக்
கண்டுவிட்டது. முன்பு சிறை



ஆசியர்களின் சொத்துக்களைத் தமது எடுபிடிகளுக்கும் முகஸ்துதி
பாடுபவர்களுக்கும் இடி அமின் தானம் கொடுத்ததைப் போலவே
அரசுச் சொத்துக்களை எம்ஜிஆர் தானம் கொடுத்தார்.
சென்னை மிருகக்காட்சிச் சாலை இருந்த இடத்தை
பழனி பெரியசாமிக்கு கொடுத்ததைப் போல.

ிட்டு சித்திரவதை செய்த
ாலீசு சங்கத் தலைவர்களைத்
டி ஓடினார். தவறுக்கு வருந்தி,
லைநீக்கம் செய்த போலீ
நக்கு மீண்டும்வேலை தருவதாக
, போலீஸ்சங்கத்தை அங்கீகரிப்
ாகவும், தேர்தலில் ஆதரிக்கும்
யும் கோரினார். கொலைக்குற்
சாட்டப்பட்ட விவசாய சங்கத்
லவர் நாராயணசாமி நாயுடுவை
று முறை தேடிப் போய் சந்
கத் தவம் கிடந்தார். வழக்கு
ள வாபஸ் வாங்குவதற்கு தான்
திரவிட்டும் அதிகாரிகள் செயல்
த்தவில்லை என்று புளுகினார்.
சாயசங்கத்தின் 9அம்ச கோரிக்
களை முழுமையாக ஏற்பதாக,
ன்களை எல்லாம் ரத்து செய்
ாக வாக்குறுதி அளித்தார், விவ

சாய சங்கம் தேர்தலில் எம்ஜிஆரை எதிர்ப்பதில்லை, நடுநிலைவகிக்கும் என்று முடிவு செய்தது.

தேர்தலில்வென்று ஆட்சியைப் பிடித்ததும் மீண்டும் தனது பாசிச குணத்தைக் காட்டத் தொடங்கினார் எம்ஜிஆர். போலீசாருக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டார். சகாய விலைக்கு உணவுப் பொருட்கள் வழங்கி, சங்க உரிமை கேட்காதவாறு வாயடைத்தார். விவசாயி சங்கத்தைப் பிளவு படுத்தி, ஒடுக்குவதில் மும்முரமாக ஈடுபட்டார். சிறு, நடுத்தர விவசாயிகளுக்குச்சில சலுகைகளை அறிவித்து விட்டு, போலீஸ்படையுடன் அதிகாரிகளை ஏவி தனித்தனியே விவசாயிகள்மீது நடவடிக்கை எடுத்தார். மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டன; சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. கடைசியாக திருச்சியில்கூட, இந்த விவசாய மாநாட்டுக்கு வந்தவர்களை வழிமறித்து கடுமையாகத் தாக்கிப் படுகாயப்படுத்தி ஓடஓட விரட்டியடித்தார். நிலைகுலைந்து பிளவு பட்டுப்போன விவசாய சங்கம்செயலிழந்தது.

போலீசுக்கும், விவசாயிகளுக்கும் மட்டுமல்லாது ஏழைஎளிய மக்கள் அனைவருக்கும் ஏராளமான தேர்தல் வாக்குறுதி வழங்கினார் எம்ஜிஆர்: ஏழைகளுக்கு நிலமும், கல்லுடைப்போர், மூட்டை சுமப்போருக்கெல்லாம்மாதச் சம்பளமும், வீட்டுக்கொருவருக்கு வேலை, இல்லையானால் 100 ரூபாய் ஈட்டுத் தொகை, ரேசனில் போடும் 5கிலோ அரிசிக்கு ஒரு கிலோ இனாம், ஏழைகள் முதியோருக்கு ஓய்வூதியம், வேலையில்லா பட்டதாரிகள், ஆசிரியருக்கு நிவாரண நிதி, தாலிக்குத் தங்கம், வேலையில்லாத நாட்களில் கூலி விவசாயிகளுக்கு ஒரு ரூபாயும் ஒருகிலோ அரிசியும் என்று எவ்வளவோ வாக்குறுதிகள்—அவ்வளவும் காற்றில் பறக்கவிட்டன.

● பெரியாரின் பகுத்தறிவு—சமூக சீர்திருத்த இயக்கங்களைத் தொடர்ந்து சற்று வரம்புக்குள் இருந்த சாதி, மதவெறியர்கள் எம்ஜிஆர் ஆட்சிக்கு வந்தபிறகு புதிய நம்பிக்கை வேகத்துடன் சாதி மதக் கலவரங்களில் ஈடுபட்டனர். இந்து முன்னணியின் பெயரில், எம்ஜிஆர் கட்சியினரின் ஆதரவுடன் ஆர்.எஸ்.எஸ் இயக்கம்வேகமாக வளரத் தொடங்கியது. எம்ஜிஆர் கட்சி எம்.எல்.ஏ கிருஷ்ணன் தலைமையில் தொடர்ந்து ஒரு வாரம் விழுப்புரம் நகரில் தாழ்த்தப்பட்டவர்கள் வேட்டையாடப்பட்டனர். 12பேர் வெட்டிக் கொல்லப்பட்டனர். பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். குடிசைகள் கொளுத்தப்பட்டன. மண்டைக்காடு, புளியங்குடி, மீனாட்சிபுரம்,பேர்ணாம்பட்டு ராஜபாளையம், ராமநாதபுரம் ஆகிய இடங்களில் சாதிமதக் கலவரங்கள் என்கிற பெயரில்தாழ்த்தப்பட்டவர்களும், மீனவர்களும் தாக்கப்பட்டனர்.

நிலப்பிரபுக்களும், அதிமு.க காரர்களும், முதலாளிகளும், போலீசாரும் பல கொலைகள் புரிந்தனர். தஞ்சை விவசாய சங்கத் தலைவர் வெங்கிடாச்சலம், நிலப்பிரபுக்களால் கொல்லப்பட்டர். நாகை எம்.பி முருகையன் அ.தி.மு.க காரனால் கொல்லப்பட்டார். மதுராந்தகம் அதிமுக அலுவலகத்திலேயே ஒரு தாழ்த்தப்பட்ட பெண் கற்பழித்துக் கொல்லப்பட்டார். கோயில் நகை கொள்ளைகளில் அதிமுகவினர் சம்பந்தப்பட்டிருந்தனர். திருச்செந்தூர் கோவிலில்நகை சரிபார்க்கும் அதிகாரி கொல்லப்பட்டார். இந்த வழக்குகளில் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதற்கு எம்ஜிஆர் அரசு முயலவில்லை. காரணம் தெரிந்ததே!

● மூன்றாவது முறை ஆட்சிக்கு வந்த பிறகு, கண்டவர்களை எல்லாம் கடித்துக்குதறத் தொடங்கிவிட்டது எம்.ஜிஆர் அரசு. போலீஸ் "லாக்அப்" சித்திரவதை கொலையில் நாட்டிலேயே முதலிடம் வகிக்கும் தமிழக போலீஸ் சென்னை—வியாசர்பாடியில் சந்தேகத்தின்



படிப்பகம்

www.padippakam.com

பேரில் இழுத்துப்போன ஒரு இளைஞரை அடித்துக் கொன்றது. நியாயம் கேட்கத் திரண்ட பகுதி மக்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தி 6 பேரைக் கொன்றது.

மெரினாக் கடற்கரையை அழகு படுத்துவதாக உலக வங்கி உத்திரவின் கீழ் முடிவு செய்து பெரும் போலீஸ் படையுடன் போய் இரவோடு இரவாக மீனவர் கட்டு மரங்களை அகற்றியது. மீனவர் குடியிருப்புகளில் இருந்து வெளியேற்றுவதற்காக ஆத்திரத்தைத் தூண்டி துப்பாக்கி சூடு நடத்தி பலரைக் கொன்றது; மீனவர் வீடுகளுக்குள் புகுந்து சூறையாடியது.

பஸ் வசதி கோரிப் போராடிய மக்களைக் கூட விட்டு வைக்கவில்லை. பெரம்பலூர் அருகே வேப்பந்தட்டை கிராம மக்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தி மூவரைக் கொன்றது. பெரும் போலீஸ் படை கிராமத்துக்குள் புகுந்து கண்மண் தெரியாமல் தாக்கியது. மிரண்டு போன மக்கள் காடுகளுக்கு ஓடித் தஞ்சம் புகுந்தனர்.

● சாதாரண மக்கள் மீது இப்படி கொலை வெறித்தாக்குதல் நடத்தியபாசிச எம்ஜிஆர் கம்யூனிச புரட்சியாளர்களை விட்டு வைப்பாரா? வட ஆற்காடு; தர்மபுரி, ராமநாதபுரம் மாவட்டங்களில் இருந்த கம்யூனிச புரட்சியாளர்கள் 21 பேரை மோகன்தாஸ்—தேவாரம் போலீஸ் கும்பலை ஏவிபடுகொலை செய்தது. "நக்சலைட்டுகள்—மோதல்" என்று கதை கட்டி விட்டது. நக்சலைட்டுகளைப் பூண்டோடு ஒழிக்கப் போவதாக எம்ஜிஆர் சபதமேற்றார். போலீசின் படுகொலைகளை விசாரிக்கப் போன மக்கள் உரிமை அமைப்பினரையும், பத்திரிக்கையாளரையும் கூட போலீசு தாக்கியது. மாநிலம் முழுவதும் பலர் மீது தேச விரோதப் பொய் வழக்குப் போட்டது.

அரசை விமர்சிக்கும் "அப்பாவி" பத்திரிக்கைகளைக்கூட விட்டு வைக்கவில்லை. ஆபாசத் தடைச் சட்டம், பத்திரிக்கைத் தடைச் சட்டம் என்கிற பெயரில் சுவரெட்டி, கருத்துப்படம், பாடுவது, பேசுவது, எழுதுவதுகூட கிரிமினல் குற்றம் என்கிற கொடிய அடக்கு முறைச் சட்டம் கொண்டு வந்தது. குதிரைகளை விரட்டுவது, பட்டம்விடுவது, வாகனங்கள் ஓசை எழுப்புவது, வாகனங்களை சாலைகளில் நிறுத்துவது, பரீட்சைகளில் காப்பி அடிப்பது ஆகியவைகூட கிரிமினல் குற்றங்கள் என்று சட்டம் கொண்டு வந்தது.

● அ தி மு க ஆரம்பித்ததிலிருந்து தாய்மார்களுக்காக முதலைக் கண்ணீர் வடித்து வந்த எம்ஜிஆர் சாராயம், லஞ்சஊழலின் பரம எதிரியாக நடித்தார். ஆட்சிக்கு வந்ததும் மதுவிலக்குச் சட்டத்தைக் கடுமையாக்கி நாடு கடத்துவது உட்பட கொடிய தண்டனைகள் விதிப்பதாக்கினார். இது கள்ளச் சாராயப் பெரும் புள்ளிகளுக்கும், போலீசாருக்குச் கொள்ளையடிப்பதற்கு மிகவும் வசதியாகிப்போனது. பிறகு கள்ளச் சாராயத்தையும், லஞ்சத்தையும் ஒழிக்க முடியவில்லை. பணம் கட்டி உரிமை பெற்றவர்களுக்கு மட்டும் சாராயம் குடிக்க அனுமதி என்றார். அப்புறம் படிப்படியாக கள்ளு—சாராயக் கடைகளை முழுவதுமாகத் திறந்து விட்டார். சாராயத் தொழிற்சாலை வைக்கும் உரிமை வழங்கியதில் கோடிக்கணக்கில் லஞ்சம் வாங்கி அம்பலப்பட்டுப் போனார்.

எம்ஜிஆரைத் தனது காலடியில் வீழ்த்துவதற்காக எரி சாராய ஊழலை விசாரிக்க ரே கமிஷனை அமைத்ததுமத்திய அரசு. எம்ஜிஆர் முந்திக் கொண்டு ராம பிரசாதராவ் கமிஷனை அமைத்து தானே நிரபராதி என்று அறிவித்துக் கொண்டார். அதன்பிறகு எம்ஜிஆர் ஆட்சி "சாராய சாம்ராஜ்ய"மானது. சாராயக் உடையார் அவருடைய கூட்டாளியானார். தனது கட்சிக் காரர்களுக்கு மட்டுமே சாராய வியாபாரம் உரிமை ஆகவேண்டும் என்பதற்காக கள்ளு—சாராயக் கடைகளை மீண்டும் மூடி விட்டு "பிராந்தி — விஸ்கி" கடைகளை ஏராளமாகத் திறந்து விட்டார்.

● திராவிடப் பாரம்பர்யம், பெரியார்—அண்ணாவின் வாரிசு என்று சொல்லிக் கொண்ட எம்ஜிஆர் தமிழர் நலன்களை மத்திய அரசிடம் அடகு வைப்பதிலும், இந்தித் திணிப்பை ஆதரிப்பதிலும், ஈழப் போராளிகளுடன் கூடி குலாவி துரோக மிழைத்துக் காட்டிக் கொடுப்பதிலும் ஐந்தாம் படையாக இருந்து பாசிச இந்திரா ராஜீவ் கும்பலுக்கு ஊழியஞ் செய்துள்ளார்.

மோகன்தாஸ் — தேவாரம் கும்பலை வைத்துக் கொண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தியவர் மீது வெடிகுண்டு—தேச துரோக வழக்குகள் போட்டுத் துன்புறுத்தியதோடு அப்பாவி மக்களைக் கொல்லவும், வெடி குண்டு பீதி கிளப்பவும் சதி செய்து அமுலாக்கினார். சபாநாயகர் பாண்டியனை வைத்துக் கொண்டு கருணாநிதி கட்சி எம்எல்ஏ பதவிகளைப் பறித்தார். ஈழப் போராளிகள் மீது அவதூறு செய்து, பொய் வழக்குப் போட்டு தமிழக மக்களிடமிருந்து தனிமைப் படுத்தினார். ராஜீவ்—ஜெயவர்த்தனே துரோக ஒப்பந்தத்துக்கும், இந்திய இராணுவ ஈழ

ஆக்கிரமிப்பு மற்றும் படுகொல
களுக்கும் துணைபோனார்.

எம்ஜிஆர் ஒரு மனிதாபிமா
ஜனநாயகவாதி; இந்திரா காங்கி
சின் கோரிக்கையினால்தான் ஜ
நாயக—விரோத, மக்கள் விரோ
நடவடிக்கைகளில் ஈடுபட்ட
என்பதாகப் போலிக் கம்யூனிஸ்
கள் சித்தரித்து வருகின்றன
எம்ஜிஆர் அடிப்படையிலேயே ஓ
வக்கிரம் பிடித்த பாசிஸ்டு. எ
போதுமே இந்திராவின் பா
கொள்கைளை ஆதரித்து வந்திரு
கிறார். அவசரநிலை ஆட்சிக்
முழு ஆதரவு கொடுத்தரோ
அதன் பிறகு அவசர நி
ஆட்சியின் "பலன்களை" க
பதற்காகவே பாடுபட்டார்.

மதம் ஏழை, எளிய மக்கள
ஏய்க்கும் போதையாக இருப்பதை
போலவே சினிமா ஒரு கவர்
போதையைத் தருவதைப் புரி
கொண்ட எம்ஜிஆர் அ
கொண்டு கிராமப்புற விவசா
களையும், நகர்ப்புற உதிரிப் ப
டாளிகளையும் ஏய்த்தார். போ
கம்யூனிஸ்டுகளின் கூட்டு, பிறப
உழைக்கும் மக்கள் ஆதரவை
பெற உதவியது. மற்றபடி பு
யுடைய இந்திராவைப் போல
தொரு சர்வாதிகாரியே நாட்டுக்கு
தேவையென்று விரும்பின
சத்துணவு உட்பட ஏழை
மீதான அவரது கரிசனை, த
தருமங்கள் நிலப்பிரபுத்து
கொடுங்கோலர்களுக்கே உரித்தா
அடிமைகளின்பால் கொண்ட ப
தான்.

அவசரநிலை ஆட்சி
ஆதரித்த எம்ஜிஆர் அ
கொடுமைகளை விசாரித்த
அனந்த நாராயணன் மற்றும் இ
மாயில் கமிசன் அறிக்கைகளை
குப்பைத் தொட்டியில் வீசின
சென்னை மத்திய சிறை சித்
வதைகளுக்காக குற்றஞ்சாட்
பட்ட பொன். பரமகுரு, வித்
சாகருக்கு பதவி உயர்வளித்த
ஜனதா ஆட்சியானாலும்,
கொண்டு வந்த தொழிலா
விரோத தொழிலுறவு மசோ
போன்றவற்றை ஆதரித்த
தாய்க்குலத்தைப் பற்றி நீ
கண்ணீர் வடித்து வந்த எம்ஜி
ராஜீவ் கொண்டு வந்த
போக்குத் தனமான முஸ்லீம்
முறிவு (ஷாரியத்) சட்டத்
ஆதரித்தார்.

"ஐயா, தருமவானே, நீ
ளாகப் பார்த்து ஏதாவது த
தர்மம் கொடுங்கள்" என்று
யேந்தி நிற்பவர்களுக்கு பர
காரியாகவும், "இது எங்
உரிமை" என்று போராடுப
களுக்கு பாசிச பரம எதிரியாக
விளங்கியவரே எம்ஜிஆர்!

● ஆர். பே



படிப்பகம்

www.padippakam.com

# போலிக் கம்யூனிஸ்டுகளின் வேசித்தனம்

தமிழகம் முழுவதும் ஒரு லட்சம் விசைத்தறி நெசவாளர்கள் இன்று நடுத்தெருவில் வீசியெறியப் பட்டுள்ளனர். குறிப்பாக சேலம் அதைச் சுற்றியுள்ள பகுதியில் மட்டும் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விசைத்தறி தொழிலாளர்கள் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக முழுவதுமாக வேலையின்றி தவிக்கின்றனர். தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான மதுரையிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கூட இதே நிலைமைதான்.

பாசிச ராஜீவின் புதிய ஜவுளிக் கொள்கையால், பருத்தி துணி ஆலைகள் முடமாக்கப்பட்டு, செயற்கை இழை ஆலைகள் அனைத்து சலுகைகளுடன் ஊட்டி வள்ர்க்கப்படுகின்றன. உள்நாட்டில் விளையும் பருத்தியையும், வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய ஏராளமான சலுகைகளை வாரி வழங்கி உள்நாட்டு பருத்தி நெசவுக்கு கச்சாப் பொருள் தட்டுப்பாட்டை உருவாக்குகிறது பாசிச ராஜீவ் அரசு. இதையெல்லாம் தொழிலாளர்களிடம் எடுத்துக் கூறி அவர்களை அரசியல் ரீதியில் போராட்டத்தில் பங்கெடுக்க வைப்பதற்கு மாறாக போலிக் கம்யூனிஸ்டு தொழிற் சங்க புரோக்கர்கள் கையாளும் வழிமுறையை பாருங்கள்.

நூல் விலையைக் குறைக்கச் சொல்லி, விசைத்தறி முதலாளிகள் நடத்தும் போராட்டத்திற்கு நெசவாளர்களையும் அணி திரட்டுவதற்காக இவர்கள் விசைத்தறி முதலாளிகளிடம், நெசவாளர்களின் சார்பாக எந்த ஒரு கோரிக்கையையும் முன் வைப்பதில்லை. நெசவாளர்களிடமும், போராட்டத்தின் அவசியத்தைப் பற்றியான, அரசியல் உணர்வையோ, வர்க்க உணர்வையோ ஏற்படுத்த முயலுவதில்லை. மாறாக, ஓட்டுப் பொறுக்கிகள் கூட்டத்திற்கு ஆள் பிடிப்பது மாதிரி, முதலாளிகள் தரும் காரியவாத கடனையும் தர்ணாவின் போது இலவச சோறு, பீடி, டீ வாங்கி தருவதையும், முதலாளிகளின் பரோபகார செயலாக சித்தரித்து முதலாளிகளின் ஆர்ப்பாட்டத்திற்கு ஆள் பிடிக்கின்றனர்.

19—12—87 இரவு பத்தரை மணி. மதுரை செல்லூர் அறுபதடி சாலைப் பகுதியில், அப்பகுதியின் சி. ஐ. டி. யு. சங்கத் தலைவர் அய்யாவு பேச்சின் சில பகுதிகள் இவை.

“பெரிய மில்லு மஹாலட்சுமி மில்லு. இரண்டரை வருசமா பூட்டியிருக்கு. அனைத்து சங்கமும் போராடியும் திறக்க முடியல. பர்மணன்ட் தொழிலாளி அவனுக்கே இந்த நிலமை. டெம்பரவரி நீ எந்த மூல. அதனாலத்தான் சொல்லுறேன். ஜாலியா பொண்டாட்டி புள்ளயோட வாயேன். வீட்ல பேசிகிட்டிருக்கிறத அங்கவந்துதான் பேசேன். என்னைக்குதான் நல்ல சாப்பாடு சாப்பிட போற. அங்கு நல்ல சாப்பாடு, பீடி, வெத்தல பாக்கு எல்லாம் உண்டு. எவ்வளவு பேர் வரணும்? இரண்டாயிரம் பேர். எங்க வரணும்? மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் முன். இரண்டாயிரம் பேர் வந்தாதான் நெசவு கூடங்களை திறப்பது பற்றி யோசன செய்வேன்னு சொல்லுறான். அதுவும் எப்பன்னு சொல்ல முடியாதுங்கிறான். நாளைக்கு ஞாயிறு 20—12—87 காலயில நீயில்ல; உன் வீட்ல உள்ள பொடிசு வந்தாலும் ரூ. 25 அளையா தரேன் (கடனா)னு முதலாளிகள் சங்கம் ஒத்துகிட்டு இருக்காங்க. அதுவும் நாங்க எழு கட்சி சங்கமும் கடுமையா கேட்டுகிட்டதால. இல்லேன்னா பத்துதான்னு முடிவாயிருக்கும். 22—12—87 தர்ணாவுல இரண்டாயிரம் பேரு இருந்தா மேக்கொண்டு ஏதாவது கடனாவும் தரேன்கிறான். அப்படியும் நூல் விலை குறையலேன்னா, ஜாலியா சொகுசு பஸ்ல நீ விரும்புற பாட்டை போட்டுகிட்டு சென்னை கோட்டைக்கு முதலாளிங்க செலவில படையெடுப்பு. அங்கே போயி பெரிய ஆர்ப்பாட்டம். தேவையின்னா பாராளுமன்றம் முன்னால் கூட ஆர்ப்பாட்டம் செய்ய ரெடி. யார் செலவுல? அவன் செலவுல.” இது சி. ஐ. டி. யு. சங்கத் தலைவன் அய்யாவுனுடைய பேச்சு.



நூல் விலை உயர்வை கண்டித்து நேற்று தமிழ்நாடு முழுவதும் கைத்தறி [illegible] மூடப்பட்டன. மதுரை செல்லூர் பகுதியில் ஒரு கைத்தறி ஆலை இயங்காமல் கிடக்கும் காட்சி.

நூல் விலையை குறைக்க வெறும் கதவடைப்பு மட்டும் போதாது என்று புரிந்துகொண்ட தறி உரிமையாளர்கள் தொழிலாளர்களையும் போராட்டத்தில் இறக்கி விட, இதுபோன்ற தொழிலாளர் துரோகிகளைத்தான் கைக்கூலியாக யாக, ஏஜண்டாக பயன்படுத்துகிறார்கள்.

போராட்டத்திற்கு ஆள்பிடித்து வருகிறேன் என்று முதலாளிகளுக்கு உறுதி கூறிய இந்த பம்மாத்துகாரர் கட்டாய கதவடைப்பை நீக்கவேண்டுமென்று கோரிக்கையைக் கூட முதலாளிகளுடன் நடந்த பேச்சு வார்த்தையில் வலியுறுத்தவில்லை. இருபத்தைந்து ரூபாய் கடனையே சாதனையாக தொழிலாளர் முன் வைத்து அவர்களை போராட சுண்டியிழுக்கிறார்.

இவர்கள் தொழிலாளிக்கு குடையாக இருப்பதைவிட நிர்வாகத்திற்கு செருப்பாக இருப்பதையே பாக்கியமாக கருதுகிறார்கள்.

நந்து, ம.க.இ.க. மதுரை



படிப்பகம்

www.padippakam.com

# பாகிஸ்தான்–வங்கதேசம்: 'ஜனநாயகம்' தீர்வாகுமா?

வங்கதேசத்தில் ராணுவ சர்வாதிகாரத்திற்கு எதிரான மக்கள் போராட்டங்கள் விண்ணை முட்டுகிறது. 'எர்ஷாத்தின் ராணுவ ஆட்சி ஒழிக! எர்ஷாத்தே பதவி விலகு!' என்ற முழக்கங்கள் நாடெங்கும் எதிரொலிக்கிறது.

முப்பெரும் கூட்டணி கட்சிகளது ஜனநாயகத்துக்கான போராட்டம் தீவிரமானதைத் தொடர்ந்து அரண்டுபோன சர்வாதிகாரி எர்ஷாத் நவம்பர் 27ல் அவசநிலையைப் பிரகடனம் செய்தார். 330 பேர் கொண்ட வங்கதேசப் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. வானொலி, வானொளி, பத்திரிக்கைகள் அனைத்தும் ராணுவ அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன. எதிர்க்கட்சித் தலைவர்கள் பலர் சிறையிலடைக்கப்பட்டனர். சிலர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். **வேலை நிறுத்தம் சட்டவிரோதமாக்கப்பட்டுள்ளது.**

வங்கதேசத்திலுள்ள அமெரிக்கத் தூதர், எங்கே தமது ஆதிக்கச் சுரண்டலுக்கு நெருக்கடி ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சி, பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினையைத் தீர்க்கச் சொல்லி எர்ஷாத்துக்கு ஆலோசனை கூறுகிறார். சர்வாதிகாரி எர்ஷாத்தும், பாகிஸ்தானில் உள்ளது போல கட்சி சார்பற்ற தேர்தல் நடத்த இசைவு தெரிவித்துள்ளார். ஆனால் எதிர்கட்சிகள் எர்ஷாத் பதவி விலக வேண்டுமென கெடு வைத்துப் போராடுகின்றன. 'சட்டத்துக்குப் புறம்பான வழியில் சதி செய்து அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள எர்சாத் முயற்சிக்கிறார். இதை ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம்' என்று எதிர்க்கட்சிகள் சவால் விடுகின்றன.

அவசரநிலையை அறிவித்து அச்சுறுத்திய போதிலும் வங்கதேச மக்கள் பணிந்து விடவில்லை. கொதித்தெழும் மக்கள் பகிரங்கமாக தெருப் போர்களில் இறங்குகின்றனர். ஒட்டு மொத்தமாக நாடு முழுவதும் தொழிலாளர்களும் அரசு ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். தடையை மீறி ஆர்ப்பாட்டங்களும், அர்த்தால்களும் குண்டு வெடிப்புகளும் சர்வ சாதாரணமாக நடக்கின்றன. சர்வாதிகாரி எர்சாத்தை பிலிப்பைன்சின் சர்வாதிகாரி மார்க்கோசுடன் ஒப்பிட்டும், எதிர்கட்சித் தலைவர்களான ஷேக் ஹசீனா வஜீத், பேகம் கலீடா ஜியா ஆகியோரை வீராங்கனைகளாகவும், அகினோவோடு ஒப்பிட்டும் கட்டுரைகளையும் கேலிச்சித்திரங்களையும் வெளியிட்டு மேற்கத்திய பத்திரிக்கைகள் பரபரப்பூட்டுகின்றன.

மறுபுறம், இந்தியாவின் வடமேற்கேயுள்ள அண்டை நாடான பாகிஸ்தானில் ஜியாவின் மதவெறி ராணுவ சர்வாதிகாரத்தை எதிர்த்து பொங்கியெழுந்த மக்கள் போராட்டங்கள் சற்றே தணிந்துள்ளது போல் தோன்றினாலும் இன்னும் நீறு பூத்த நெருப்பாகவே உள்ளது. கடந்த ஈராண்டுகளுக்கு முன்பு வங்கதேசத்தைப் போலவே, சர்வாதிகார எதிர்ப்புப் பேரலை பாகிஸ்தானில் சுழன்றடித்தது.

தொடர்ந்து தனது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள அமெரிக்காவின் ஆலோசனையின் பேரில் எட்டரை ஆண்டுகால ராணுவ சர்வாதிகாரத்தை சற்றே தளர்த்தியது ஜியா அரசு. மோசடித் தேர்தல் நடத்தி தான் வெற்றி பெற்றதாக அறிவித்துக் கொண்டு, இனி இஸ்லாமிய முறையில் நாட்டை வழிநடத்திச் செல்லப் போவதாகக் கூறி காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறையை ஏவி விட்டு ஆட்டம் போடுகிறது ஜியா அரசு. இஸ்லாமிய ஹுதூத் சட்டப்படி, அல்லாவின் ஆணைப்படி ஆளுவதாகக் கூறி சாதாரண குற்றங்களுக்கேகூட உடலுறுப்புக்களை வெட்டுவது, வீதியில் வைத்து சவுக்கால் அடிப்பது, கல்லால் அடித்து கொலை செய்வது முதலான கேவலமான கொடிய அடக்குமுறையால் நாட்டையே சித்திரவதைக் கூடமாக்கியுள்ளது. பெண்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு சாரியத் சட்டப்படி அடிமைகளாக்கப்பட்டுள்ளனர்.

அண்டை நாடான ஆப்கானை ரசியா ஆக்கிரமித்துக் கொண்டுள்ளதால் பாகிஸ்தானுக்கு அபாயம் என்று கூறிக் கொண்டு நாட்டின் கருவூலத்தையே காலி செய்து அமெரிக்காவிடமிருந்து ஆயுதங்களை வாங்கிக் குவித்து மக்களை நிரந்தர ஏழ்மையில் தள்ளியுள்ளது ஜியா அரசு. அணு ஆயுதத் தயாரிப்புத் திட்டம் மட்டுமின்றி விவசாயம், தொழில் உள்ளிட்ட அனைத்தையும் அமெரிக்காவின் உலக வங்கியின் கட்டுப்பாட்டில் விட்டுவிட்டு அடிவருடியாகத் திகழ்கிறது.

ராணுவ ஆட்சியை சற்றே தளர்த்தி 'ஜனநாயக' நாடகமாடி தனது ஆட்சியை தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டுள்ள போதிலும், மக்களது சர்வாதிகார எதிர்ப்புப் போராட்டங்களைக் கண்டு அஞ்சி நடுங்குகிறது ஜியா அரசு. ஜியாவுக்கு சவால் விடுக்கும் எதிர்க்கட்சித் தலைவி பெனாசிர் பூட்டோவின் நீர்த்துப் போன போராட்ட முறைகளால் சலிப்புற்ற மக்கள் இப்போது பயங்கரவாத நடவடிக்கைகளில் இறங்கத் தொடங்கியுள்ளனர். பலுசிஸ்தான், சிந்து தேசிய இனமக்கள் தங்கள் சுயநிர்ணய உரிமைக்காக கொரில்லா முறையிலான போராட்டங்களில் முன்னேறுகின்றனர். மேலும், ராணுவத்துக்குள் உட்பூசல்கள் தீவிரமாகி, ஜியாவின் ஆட்சியையே அச்சுறுத்துகின்றன.

பாகிஸ்தானில் ஜியா எதிர்ப்பு அலையைப் பயன்படுத்திக் கொண்டு ஆட்சிக்கு வரத் துடிக்கும் கட்சிகளில் பெரும்பாலானவை ஆளும் வர்க்கக் கட்சிகளே. தூக்கிலிடப்பட்ட பூட்டோவின் மகள் பெனாசிரால் தலைமை தாங்கப்படும் பாகிஸ்தான் மக்கள் கட்சியே இன்று பிரபலமானதாகவும் ஜியாவுக்கு சவாலாகவும் உள்ளது.

மேலை நாட்டில் கல்வி கற்று அந்தக் கலாச்சாரத்தில் ஊறிப் போன பெனாசிர் கோருவதெல்லாம் முதலாளித்துவ ஜனநாயகம் தான். அதைக்கூட மக்கள் அனைவருக்கும் வாக்குரிமை; ஓட்டுப் போடுவதற்கான ஜனநாயகம் என்ற அளவில்தான் மக்கள் கட்சி குறுக்கிச் சுருக்கி சித்தரிக்கிறது. பூட்டோவின் ஆட்சிக்காலம் ஜனநாயகத்தின் பொற்காலம் என்றும், 'பூட்டோயிசம்' தங்கள் கொள்கை என்றும் பிரகடனப்படுத்துகிறது.

ஆனால் பூட்டோவின் ஆட்சி பொற்காலமானதோ, ஜனநாயகமானதோ அல்ல; எதை ஜனநாயகம் என்று ஏற்றிப் போற்றுகிறார்களோ அதே பூட்டோவின் ஆட்சிதான் படிப்படியாக ஒற்றை நபர் சர்வாதிகாரமாக மாறி தனது உண்மைச் சொரூபத்தைக் காட்டியது. முற்போக்கு ஜனநாயகவாதி என்று இடதுசாரிகளின் ஆதரவோடு ஆட்சியைப் பிடித்த பூட்டோ, ஆட்சிக்கு வந்த ஏழே மாதங்களில் தொழிற்சங்க உரிமைகளைப் பறித்



படிப்பகம்

www.padippakam.com



இஸ்லாமிய முறையில் நாட்டை வழி நடத்திச் செல்லப் போவதாகக் கூறி காட்டுமிராண்டித் தனமாக ஆட்டம் போடுகிறது ஜியா அரசு.

தார். கதவடைப்பை எதிர்த்துப் போராடிய தொழிலாளர்கள் 1972ல் கராச்சியில் சுட்டுக் கொல்லப்பட்டனர். தொழிற்சங்க முன்னோடிகள் சிறையிடப்பட்டனர். எதிர் கட்சியினரை ஒடுக்க குண்டர் படையை பூட்டோ ஏவிவிட்டார். இது தவிர தேசியபாதுகாப்புப் படைஎன்ற ரகசிய அதிரடிப் படையையும் கட்டியமைத்தார். எதிர்கட்சிகளதுமா நில அரசுகளை ஜனநாயக விரோதமாகக் கலைத்து கவர்னர் ஆட்சியைத் திணித்தார்.

கிஞ்சித்தும் சகிப்புத் தன்மையற்ற பூட்டோ, தனது சக மந்திரி மந்திரிகளையேகூட சிறையிலடைத்துவிட்டு அதிகாரங்களைக் குவித்துக் கொண்டார். தேசிய சுய நிர்ணய உரிமைக்காகப் போராடிய பலுசிஸ்தான் மக்களையும் கொரில்லாக்களையும் ராணுவத்தை ஏவி மிருகத்தனமாக ஒடுக்கினார். இதுபற்றிய செய்திகளையே வெளியிடக் கூடாதென்று பத்திரிக்கைகளை மிரட்டினார். செய்திப் பத்திரிக்கைகள் மீதான தணிக்கையும், பத்திரிக்கையாளர் சிறையிடப்படுவதும் சர்வ சாதாரணமாக நடைமுறைப் படுத்தப்பட்டது. தலைமறைவாக இயங்கி வந்த மார்க்சிய—லெனினிய கம்யூனிஸ்ட் கட்சியின் அணிகள் சித்திரவதை செய்யப்பட்டு சிறையிலடைக்கப் பட்டனர்.

வேறெந்த ஆட்சியையும்விட பூட்டோவின் ஆட்சியில்தான் ராணுவம் அடிக்கடி கட்டவிழ்த்து விடப்பட்டு மக்கள்மீது ஏவப்பட்டது. அன்னிய மூலதனம் பூதாகரமாக நுழைந்து நாட்டையே சூறையாடியது. இதோடு, நாட்டின் ஆளும் வர்க்கங்களில் ஒன்றான தரகு முதலாளிகள் மத்திய கிழக்கு நாடுகளில் மூலதனமிட்டுச் சுரண்டவும் பூட்டோ ஏராளமான வசதிகளைச் செய்து கொடுத்தார்.

ஜனநாயக முடுதிரையின் பின்னே நடந்த பூட்டோவின் ஒற்றை நபர் சர்வாதிகார ஆட்சியைத்தான் 'பொற்கால ஆட்சி' என்று பாகிஸ்தான் எதிர்க்கட்சிகளும் பத்திரிக்கைகளும் ஏற்றிப் போற்றுகின்றன. பெனாசிரை பிலிப்பைன்சின் அகினோவோடு ஒப்பிட்டு புகழ்பாடுகின்றன. நடுத்தர வர்க்கத்தினரிடையே பிரபலமாக உள்ள பெனாசிர், ஜனநாயகத்தோடு சோசலிச சொல்லடுக்குகளையும் அவிழ்த்துவிட்டு கவர்ச்சியாக பிரச்சாரம் செய்கிறார்.

இதே வகையில்தான் வங்க தேசத்திலும் முஜிபுர் ரஹ்மான், ஜியாவுர் ரஹ்மான் ஆகிய சர்வாதிகாரிகளை ஜனநாயகவாதிகளாகவும் வழிகாட்டிகளாகவும்சித்தரித்து அவர்களின் நினைவாக உருவான அவாமி லீக் கட்சியும், வங்க தேசிய கட்சியுமே இன்றைய எர்சாத் சர்வாதிகார எதிர்ப்புப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்குகின்றன. இக்கட்சிகளின் தலைவர்களாக இருப்பவர்களும் முன்னாள் சர்வாதிகாரிகளின் வாரிசுகளும் உறவினர்களும்தான்!

முன்பு ஈரானின் ஷாவும், பின்பு நிகரகுவாவின் சமோசாவும் மக்களின் புரட்சி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர். மக்களது புரட்சிகர போராட்டங்களால் விரட்டப்பட்டதால் தொடர்ந்து தமது சேவைக்கான அடிவருடிகளைத் தேடிக் கொள்ள முடியாமல் போய்விடுகிறது என்கிற பாடத்தை ஏகாதிபத்தியங்கள் கற்றுக் கொண்டுள்ளன.

எனவேதான் மக்கள் இயக்கங்களின் தலைமையைக் கைப்பற்றி தமது சொந்த அடிவருடிகளை நிறுவிக் கொள்வது; அல்லது மக்களிடம் அம்பலப்பட்டு தனிமைப்பட்டுப் போனசர்வாதிகாரிகளையே தொடர்ச்சியாக சீர்திருத்தங்களைக் கொண்டு வரும்படி நிர்பந்திப்பது; அல்லது மக்களின் புரட்சி வெள்ளத்திற்கு வடிகால் அமைத்து பழைய சர்வாதிகாரிகளுக்குப் பதிலாக தமது புதிய அடிவருடிகளை பதவியில் அமர்த்துவது என்கிற புதிய தந்திரத்தை ஏகாதிபத்தியங்களும் அதன் அடிவருடிகளும் மேற்கொண்டுள்ளனர்.

இத்தகைய முறையில்தான் பிலிப்பைன்சில் மார்க்கோஸ் விரட்டப்பட்டு, புதிய அமெரிக்க அடிவருடி திருமதி அகினோ பதவியில் அமர்த்தப்பட்டார். இதே உத்தியைக் கையாண்டுதான் தென் கொரிய சர்வாதிகாரியை சீர்திருத்தங்களை மேற்கொள்ளச் சொல்லி அமெரிக்கா நிர்பந்தித்தது. அதன்படியே எதிர்க்கட்சித் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டு தேர்தலும் நடந்து மீண்டும் அமெரிக்க அடிவருடிக் கும்பலே ஆட்சிக்கு வந்துள்ளது.

இதே தந்திரத்தோடுதான் பாகிஸ்தான்—வங்கதேச சர்வாதிகாரிகளும் 'ஜனநாயக' வாதிகளுமான ஏகாதிபத்திய அடிவருடிகள் நாடகமாடுகிறார்கள். வங்க தேசத்தில் சர்வாதிகாரி எர்சாத் முற்றாக மக்களிடம் அம்பலப்பட்டுப்போன நிலையில் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்தல் நடத்த முன் வந்துள்ளார். வீட்டுக்காவலில் வைக்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர்களை விடுதலை செய்துள்ளார். மறுபுறம் எதிர்க்கட்சியினர் எர்சாத் பதவி விலக வேண்டுமென்றும், அவர் ஆட்சியில் நடைபெறும் எந்த தேர்தலையும் ஏற்க மாட்டோம் என்றும் எதிர் கோரிக்கை வைக்கின்றனர். ஆனால் பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு அப்பால் செல்ல அவர்கள் ஒருபோதும் துணியவில்லை. மக்களின் புரட்சி வெள்ளத்திற்கு வடிகால் அமைக்கும் வேலையையே திறமையாகச் செய்கின்றனர். 'ஆட்சி பொறுப்பை எர்சாத் கட்சி சார்பற்ற ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டும். இப்படிப்பட்ட இடைக்கால அரசில் நடைபெறும் தேர்தலையை ஏற்போம்' என்கின்றனர். ஆனால் எர்சாத் இதைஏற்க முடியாதுஎனகொக்கரிக்கிறார். 'தேர்தலைச் சந்திக்கத் திராணியற்றவர்களின் கோழைத்தனமான யோசனை இது' என்று

படிப்பகம்

www.padippakam.com

சாடி வந்த எர்சாத், பின்னர் 'வேண்டுமானால் வெளி நாட்டுப் பார்வையாளர்கள் முன்னிலையில் தேர்தல் நடத்தத் தயார்' என்றுஇப்போது இறங்கி வந்துள்ளார். எதிர்க்கட்சிகள் இப்போதைக்கு இதற்குச் சம்மதிக்காவிட்டாலும் ஏதோ ஒரு வகையில் தேர்தல் மூலமாகவே சர்வாதிகாரி எர்சாத்தை விரட்டிவிட்டு பதவியைப் பிடிக்கத் துடிக்கின்றன.

வங்க தேச அரசியல் சட்டத்தை ஏற்றிப் போற்றுவது, சட்ட வரம்புக்குட்ட போராட்டங்களையே நடத்துவது, அதையும் மீறிக் கொண்டு மக்களின் போராட்ட அலை உயரும்போது அதைக் கட்டுப்படுத்தி எச்சரிப்பது, தேர்தல் மூலமாகவே சர்வாதிகாரத்தை விரட்டியடிப்பதோடு மக்களின் அடிப்படைத் தேவைகளையும்கூட பூர்த்தி செய்துவிட முடியும் என்று மக்களை மாயையில் ஆழ்த்துவது என்ற வகையிலேயே எதிர்க்கட்சிகளின் செயல்பாடுகள் உள்ளன. சர்வாதிகாரத்துக்கு அடிப்படையாக உள்ள பாராளுமன்ற ஆட்சி முறையை ஒழிப்பது பற்றியோ, சர்வாதிகார ஆட்சியின் ஊற்றுக் கண்ணாக உள்ள ஏகாதிபத்தியம்—நிலப்பிரபுத்துவத்தை ஒழிப்பது பற்றியோ திட்டமோ கொள்கையோ எதுவுமே இக்கட்சிகளிடம் இல்லை.

பாகிஸ்தானிலும் சரி, வங்க தேசத்திலும் சரி ஜனநாயகத்தைக் கோரும் எதிர்க் கட்சிகள் தாங்கள் வெற்றி பெறாவிட்டாலும் போராட்டம் கம்யூனிஸ்டுகளின் தலைமைக்குப்போய் விடாதபடி தடுப்பதிலேயே குறியாக உள்ளன. கம்யூனிச அபாயத்தைத் தடுக்க அவர்கள் சர்வாதிகாரத்தைக்கூட ஏற்றுக் கொள்ள தயாராக உள்ளனர்.

எனவேதான் சர்வாதிகார எதிர்ப்புப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கும் இக்கட்சிகளால் பரந்துபட்ட மக்களுக்கான ஜனநாயகத்தை ஒரு போதும் வென்றெடுக்க முடியாது. அவர்கள் கோரும் பாராளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையில் இன்றையராணுவ சர்வாதிகார ஆட்சியைவிட கூடுதலான உரிமைகள் இருக்கின்றன என்பது உண்மையே; எனினும் பாராளுமன்ற ஜனநாயகம் பரந்துபட்ட மக்களுக்கு அரசியல் அதிகாரத்தில் பங்களிக்கும் உரிமையை மறுக்கும் பண நாயக அமைப்பேயாகும். இந்நிலையில் ராணுவ சர்வாதிகாரத்தை எதிர்த்து அனைத்து மக்களும் பாராளுமன்றஜனநாயகத்தைக் காக்க வேண்டுமென இக்கட்சிகள் கூறுவது, நீ அரிசி கொண்டு வா, நான் உமி கொண்டு வருகிறேன், இருவரும் ஊதி ஊதி சாப்பிடலாம் என்கிற கதைதான். அதாவது, ராணுவ ஆட்சியில் பின்னுக்குத் தள்ளப்பட்ட ஒரு பிரிவு ஆளும் வர்க்கங்களும் அனைத்து மக்களும் சேர்ந்து போராடி, ஆளும் வர்க்கங்களுக்கு மட்டுமே அரசியல் அதிகாரத்தில் வாய்ப்பளிக்கும் பாராளுமன்ற ஜனநாயகத்தைக் காக்கலாம் என்பதே இக்கட்சிகளின் சர்வாதிகார எதிர்ப்பு முழக்கத்தின் சாராம்சமாகும்.




டாக்கா: வங்க தேசத்தில் சர்வாதிகார எதிர்ப்புத் தீ பற்றிப் பரவுகிறது.

இந்நிலையில், ராணுவசர்வாதிகார ஆட்சி முறைக்கு உண்மையான தேசிய மாற்றாகத் திகழ்வது புதிய ஜனநாயகப் புரட்சியே. சட்டத்தை இயற்றவும் அவற்றை நடைமுறைப் படுத்தவும், அனைத்து அதிகார மட்டங்களுக்கும் தேர்ந்தெடுக்கவும் திருப்பியழைக்கவும் உழைக்கும்மக்களுக்கு உரிமைகளை வழங்கக் கூடியது புதிய ஜனநாயகப் புரட்சியே. சர்வாதிகார எதிர்ப்பு சக்திகளின் முழு அதிகாரத்துக்கும் ஜனநாயகத்துக்கும் உத்திரவாதம் அளிக்கக் கூடியது புதிய ஜனநாயக அரசியல் அமைப்பு மட்டுமே.

இத்தகைய புரட்சிகர திட்டத்தை முன் வைத்து பாகிஸ்தான்—வங்கதேச மார்க்சிய—லெனினியப் புரட்சியாளர்கள் போராடி வருகிறார்கள். உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற முழக்கத்துடன் விவசாயப் புரட்சி, அனைத்து அன்னிய முதலீடுகளையும் நட்ட ஈடின்றி பறிமுதல் செய்தல், அந்நிய நாடுகளுடனான சமனற்ற ஒப்பந்தங்களை ரத்து செய்தல், அன்னிய ஏகாதிபத்தியங்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ள தரகு முதலாளிகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தல், தேசிய முதலாளிகளின் தொழில்—வர்த்தகத்தைப் பாதுகாத்து வளர்த்தல், தொழிலாளிகள், விவசாயிகள், நடுத்தர வர்க்கத்தினர், தேசிய முதலாளிகளின் கூட்டு சர்வாதிகாரத்தை தொழிலாளிகள் தலைமையில் நிறுவுதல், இந்தப் பிரிவு மக்களுக்கு மட்டுமே தேர்ந்தெடுக்க திருப்பியழைக்க உரிமை, அனைத்து ஜனநாயக உரிமை மற்றும் ஆயுதமேந்தும் உரிமை, தனிவகை போலீஸ்—ராணுவத்தைக் கலைத்தல், அனைத்து தேசிய இனங்களின் சமத்துவம், சுயநிர்ணய உரிமை அளித்தல்—என்கிற நோக்கங்களை உள்ளடக்கிய தேசிய ஜனநாயக முன்னணியைக் கட்டிப் போராடி வருகிறார்கள்.

இத்தகைய புரட்சி மட்டுமே சர்வாதிகாரிகளிடமிருந்து உண்மையான ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் பறித்தெடுக்கும். இல்லையானால் முன் வாசல் வழியே புலியை விரட்டிவிட்டு பின் வாசல் வழியே கரடியை நுழைய விடுவதாக அமையும் என்பதை மக்கள் அனுபவ ரீதியாக உணர்ந்து வருகிறார்கள். இன்று மார்க்சிய—லெனினிய குழுக்கள் போதிய பலமின்றியும் சிறுசிறு குழுக்களாகப் பிளவுபட்டுமிருப்பதால் இத்திட்டத்தை முன் வைத்து, தேசிய ஜனநாயக முன்னணியை வீரியத்துடன் கட்டியமைத்து புரட்சியை முன்னெடுத்துச் செல்ல இயலவில்லை. இருப்பினும், சரியான மாற்று அரசியல் திட்டத்தை முன்வைத்துள்ள புரட்சியாளர்கள் விரைவில்ஐக்கியப்பட்டு தேசிய ஜனநாயக முன்னணியைக் கட்டியமைத்து புரட்சியை நிச்சயம் சந்திப்பார்கள். சர்வாதிகார ஆட்சியையும் அதற்கு அடிப்படையாக உள்ள பாராளுமன்ற ஜனநாயகத்தையும் மக்கள் புரட்சியில் சுட்டெரிப்பார்கள்.

● பாலன்


படிப்பகம்

www.padippakam.com





நடப்பது நாடாளுமன்ற ஆட்சியா? ராணுவ ஆட்சியா?—இது ஏதோ இன்றைய ஆட்சிமுறையில் வெறுப்புற்றவர்கள் வீசும் வார்த்தைக் கணைகளல்ல. மணிப்பூர் மாநில அரசே மத்திய அரசிடம் இந்தச் சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

ஆம்! மணிப்பூர் மாநிலத்தில் மாநில அரசுக்கு இணையாக இந்திய ராணுவத்தின் மாற்று அரசு செயல்படுகிறது. மணிப்பூரின் சேனாபடிமாவட்டம் ராணுவத்தின் சர்வாதிகாரப் பிடியிலுள்ளது. மாநில முதல்வர் உட்பட தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்யாரும் இம்மாவட்டத்தில் நுழைய அனுமதியில்லை. அதிகார வர்க்கமும் போலீசும்கூட இங்கு செயல்பட முடியவில்லை. கலெக்டர், தாசில்தார் மற்றும் போலீஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டு அலுவலகங்கள் சூறையாடப்பட்டன. அதிகாரிகளின் கதியே இதுவென்றால் சாதாரண மக்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

கடந்த ஜூலை 9ம் தேதி சேனாபடி மாவட்டம் ஒய்நாம்பகுதியில் முகாமிட்டிருந்த அஸ்ஸாம் துப்பாக்கிப் படைமீது, நாகா சோசலிச தேசியக் கவுன்சில் என்ற அமைப்பைச் சேர்ந்த கொரில்லாக்கள் தாக்குதல் நடத்தினர். 9 ஜவான்கள் கொல்லப்பட்டு ஆயுதங்கள் சூறையாடப்பட்டன. ஆத்திரமுற்ற ராணுவம் ஜுலை 11ம் தேதி முதல் ஒய்நாம் பகுதி மட்டுமின்றி சேனாபடி மாவட்டத்தையேதனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தது. 'நீலப் பறவை நடவடிக்கை' என்ற பெயரில் கொரில்லாக்களைத் தேடி அழிக்கும் படலத்தை ராணுவம் மேற்கொண்டுள்ளது. இம்மாவட்டத்திற்குள் யாரும் உள்ளே வரவோ வெளியே செல்லவோ முடியாதபடி தடை செய்யப்பட்டுள்ளனர். போக்குவரத்து முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளது. உணவு கிடைக்காததாலும் மருத்துவ வசதியில்லாததாலும் ஏராளமான குழந்தைகளும் முதியவர்களும் பட்டினியாலும் நோயாலும்மாண்டு போயுள்ளனர். செப்டம்பர் 22ந் தேதி வரை அப்பாவிகள் 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர். பெண்கள் சித்திரவதை செய்யப்பட்டு கற்பழிக்கப்படும் கொடூரத்திற்கு கணக்கேயில்லை.

டெல்லியில் படிக்கும் நாகா மாணவர் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் இச்செய்தியை அறிந்து ஒய்நாம் பகுதிக்குச் செல்ல முயன்றபோது அவர்கள் ராணுவத்தினரால் மிருகத்தன்மாக தாக்கப்பட்டு கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டனர். படுகாயங்களுடன் திரும்பிய மாணவர்கள் டெல்லி பத்திரிக்கை நிருபர்களுக்கு அவற்றைக் காட்டி பேட்டியளித்துள்ளனர்.

இது தவிர மணிப்பூர் மாநில அரசின் கல்வி மந்திரியின் வீடு ராணுவத்தால் சூறையாடப்பட்டுள்ளது. காங்கிரஸ் பிரமுகர் சாலமன் கொடுரமாக சித்திரவதை செய்யப்பட்டு மருத்துவமனையில் கிடக்கிறார். ராணுவத்தால் இழுத்துச் செல்லப்பட்ட சுயேட்சை எம்எல்ஏ பெஞ்சமின்பானிக்கு என்ன கதி நேர்ந்தது என்று இன்னமும் தெரியவில்லை.

மணிப்பூர் மாநில மந்திரிசபை இக்கொடுமைகளை விவரித்து மத்திய அரசுக்கு கடிதம் எழுதி காத்து கிடக்கிறது. மத்திய அரசோ கடிதத்தை குப்பைக் கூடையில்எறிந்து விட்டு எந்த நடவடிக்கையும் எடுக்காமல், இது பற்றிய செய்திகூட வெளிவராதபடி தடுக்கிறது.

சொந்த நாட்டு மக்களையே கடித்துக் குதறும் இந்திய ராணுவம் தான், ஈழத் தமிழர்களைப் பாதுகாக்கிறதாம்! மணிப்பூரில் இந்திய ராணுவம் செய்துவரும் கற்பழிப்பு, சூறையாடல், படுகொலைகள்—இலங்கையில் தொடர்ந்து வரும் அதே அட்டூழியங்கள்தான்!

## ஒரு துரோகியின் வாழ்வும் சாவும்

போலிக் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் உலுத்துப்போன தூண் ஒன்று சரிந்து விட்டது. ''மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு'' கட்சியின் முன்னாள் தலைவர்களில் ஒருவர் பி. ராமமூர்த்தியின் சாவை இப்படித்தான் நினைவு கூற முடியும். பி. ராமமூர்த்தி பற்றிய பிரமை கம்யூனிசப் புரட்சியாளர்களிடம் ஒரு போதுமே இருந்ததில்லை. அவருடைய கட்சிக்காரர்களே மதிக்காத ஒரு இழிவான சாவை அவர் அடைந்தார். ''மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு'' கட்சியை உருவாக்கிய நிறுவனர்களில் ஒருவர். ஆனால் தள்ளாத வயதிலும் பதவி ஆசை விடாது, போய் காங்கிரசுக்காரர்களின் தயவை நாடிப் போனதால் தன் கட்சிக்காரர்களிடமே மதிப்பிழந்தார். அதற்காக கட்சியின் அரசியல் தலைமைக் குழுவிலிருந்து நீக்கப்பட்டார்.

இது ஏதோ கடைசிக் காலத்தில் செய்துவிட்ட தவறு என்றுதான் அவருடைய கட்சி அணிகளில் பலரும் எண்ணிக் கொண்டனர். டி.வி.எஸ். முதலாளியினால் கை தூக்கி விடப்பட்ட பி. ராமமூர்த்தி அடிப்படையிலேயே ஒரு காந்திய—காங்கிரசு— பார்ப்பனியவாதி. கம்யூனிச இயக்கத்தில் அவர் நீண்டகாலம் இருந்த போதும், கலப்புத் திருமணம் செய்து கொண்ட போதும்அந்தத் தன்மைகளை அவர் கை விடவில்லை. பாட்டாளி வர்க்கத்துடனும் விவசாயிகளுடனும் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்வதைவிட, தரகுமுதலாளிகளுடனும் நிலப்பிரபுக்களுடனும் அவர்களுடைய அரசியல் பிரதிநிதிகளான காங்கிரசுடனும்கூடிக்குலாவுவதையே பி. ராமமூர்த்தி அதிகம் கவனத்தில் கொண்டு செயல்பட்டார். எனவே அவர்களுக்காகவே கம்யூனிச இயக்கத்துக்குள்ளிருந்து பாடுபட்டார்.

வேறெதையும்விட கடைசியாக அவர் எழுதிய ''விடுதலைப் போரும் திராவிட இயக்கமும்'' என்கிற புத்தகமே அடிப்படையில் அவர் ஒரு காந்திய—காங்கிரசு—பார்ப்பனியவாதி என்பதற்கான ஆதாரமாக விளங்குகிறது. இந்த விமர்சனத்தை நிருபிக்கும் வகையில் ''ஒரு கம்யூனிச துரோகியின் மரண சாசனம்'' என்கிற கட்டுரைத் தொடர் புதிய ஜனநாயகம் இதழில் விரைவில் தொடங்கும் என்பதை அறிவிக்கிறோம்.

—ஆசிரியர் குழு

படிப்பகம்

www.padippakam.com

## அற்பக் கூலி அடிமை வாழ்வு

# கொத்தடிமைகளாக கூலி விவசாயிகள்

"வருஷம் முச்சூடும் பொண்டாட்டி புள்ளகுட்டிங்களோட மாடா ஒழைக்கிறேன். அதிகபட்சம் எங்க வருச வருமானம் 800 ரூபா தான். வருசத்துல 120 நாளைக்குத் தான் வேலை கெடைக்குது. மீதி நாளுங்கள்ள விறகு வெட்டறது, எலி புடிக்கறது இப்படி ஏதாவது வேலை செஞ்சு வயித்தக் கழுவுறோம். என் வூட்டுக்காரியும் புள்ளைங்களும் கொளத்துல அல்லிக் கெழங்கு புடுங்கிக்கிட்டு வருவாங்க. எம்புள்ளைங்கள பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப முடியல. சோத்துக்கே வழியில்லாம தவிக்கும்போது இவனுங்க படிச்சி என்னத்தக் கிழிக்கப்போறாங்கன்னு நிறுத்திப் புட்டேன். அவனுங்க மாடு மேய்க்கிறாங்க" என்று வேதனையோடு தனது அவல வாழ்வை விவரிக்கிறார் தஞ்சை மாவட்டம் சிவராமபுரத்தைச் சேர்ந்த கூலி விவசாயி திண்டன்.

கூலி விவசாயி திண்டனின் குடும்பம் ஆண்டுக்கு ரு 800தான் ஈட்ட முடிகிறது. அதாவது அக்குடும்பத்தின் மாத வருமானம் வெறும் ரு 66தான். இன்னும் சரியாகச் சொன்னால், திண்டன் குடும்பம் ஒரு நாளைக்கு கூலியாகப் பெறும் இரண்டு ரூபாயைக் கொண்டு எப்படியோ அதிசயமாக உயிர் வாழ்கிறது.

இது ஏதோ கூலி விவசாயிகள் நிறைந்த தஞ்சை மாவட்டத்தில் காணப்படும் நிலைமை மட்டுமல்ல; நாடு முழுவதும் பிச்சைக்காரர்களுக்கு ஒப்பாக, அற்பக் கூலிக்கு உழைத்துக் கொண்டு தரித்திர நிலையில் உழல்கிறார்கள் விவசாயக் கூலித் தொழிலாளர்கள். இரு மாதங்களுக்கு முன்பு 'இந்து' பத்திரிக்கை தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா ஆகிய 4 மாநிலங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில பகுதிகளுக்குச் சென்று கூலி விவசாயிகளிடம் பேட்டி கண்டு அவர்களின் வாழ்நிலையைப் பற்றி ஆய்வு செய்து எழுதியது. 'இந்து' நாளிதழ் ஒரு முதலாளித்துவ பத்திரிக்கையாய் இருந்தாலும், அதன் மேலோட்டமான ஆய்வுகளே அதிர்ச்சியூட்டுவதாக உள்ளது.

ஆந்திராவின் மாகல்லு கிராமத்தைச் சேர்ந்த அங்கலு—ராமையா சகோதரர்கள் கூட்டுக் குடும்பமாக குத்தகைக்கு 10 ஏக்கர் நிலத்தை உழுது பயிரிடுகிறார்கள். "10 பேர் கொண்ட எங்கள் குடும்பத்திற்கு ஆண்டுக்கு 10 மூட்டை நெல்தான் கிடைக்கிறது. இதைக் கொண்டு நாங்கள் எப்படி வாழ முடியும்? எனவே நாங்கள் வெளியிடங்களில் கூலி வேலைக்குச் செல்கிறோம். பருவ காலங்களில் ஆண்களுக்கு 15 ரூபாய் கூலியும், பெண்களுக்கு 10 ரூபாய் கூலியும் கிடைக்கிறது. மற்ற காலங்களில் ஆண்களுக்கு 8 ரூபாயும்பெண்களுக்கு 5 ரூபாயும்கிடைக்கிறது. இதற்காக வேலை தேடி ஒவ்வொரு ஊராக அலைய வேண்டியிருக்கிறது. அப்படியும்கூட வருடத்தில் 150 நாட்கள்தான் வேலை கிடைக்கிறது" என்று வேதனையோடு கூறுகிறார்கள்.

கேரளாவின் பாலக்காடு அருகிலுள்ள அரசாங்கப் பண்ணையில், ஆண்களுக்கு 15 ரூபாயும், பெண்களுக்கு 12 ரூபாயும்கூலியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. "ஆண்டுக்கு 60 நாட்களுக்குத்தான் இங்கு வேலை தருகிறார்கள். இதைநம்பிக் கொண்டு எப்படி வாழ்க்கை நடத்த முடியும்? இதனால் நான் இன்னும் திருமணமே செய்து கொள்ளவில்லை" என்று விரக்தியோடு கூறுகிறார் அங்கு வேலை செய்யும் கூலித் தொழிலாளி ராமன்குட்டி.

கர்நாடகாவின் மந்த்யா அருகிலுள்ள கோபால புரத்தில் வசிக்கும் விவசாயக் கூலியான சாரதாம்மாவுக்கு நாளொன்றுக்கு 50 பைசா தான் கூலியாக கிடைக்கிறது. "இப்போது எனக்கு வயதாகி விட்டதால் வேலை செய்ய முடியவில்லை. புளி குத்தும் வேலை செய்கிறேன். எனது மகன் இப்போது வளர்ந்து விட்டான். அவனுக்கு 4 ரூபாய் கூலி கிடைக்கிறது" என்கிறார். மந்த்யாவைச் சேர்ந்த 50 வயது கிழவர் முத்துராம ரெட்டிக்கு 7 ரூபாய் கூலி கிடைக்கிறது. ஆனால் வருடத்தில் 120 நாட்களுக்குத் தான் வேலை. மீதி நாட்களில். நகர்ப்புறங்களுக்கு சென்று பிழைக்கிறார்.



நாள் முழுக்க உழைத்தாலும் ஆண்களுக்கு 15 ரூபாயும் பெண்களுக்கு 8 ரூபாயும்தான் கூலி கிடைக்கிறது என்கிறார் செஞ்சி அருகிலுள்ள 21 வயதான கூலிவிவசாயி கமலா.

சிவகங்கை தாலுகா பகுதியில் ஒருவரின் சராசரி வருட வருமானம் ரூ. 425தான். தஞ்சை மாவட்டத்தில் நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பம் வாழ சராசரி வருட வருமானம் 2000 ரூபாயாவது இருக்க வேண்டும். ஆனால் கும்பகோணம் அருகிலுள்ள தியாகராஜபுரம் கிராமத்தில் வாழும் குன்னுசாமி, அவர் மனைவி, குழந்தைகள் என குடும்பம் முழுவதுமே உழைத்தும் கூட சராசரி வருட வருமானம் ரூ. 1800 தான். அதாவது ஒரு நாளைக்கு ஒருவரின் சராசரி வருமானம் ஒரு ரூபாய்க்கும் குறைவு.

வறுமையை ஒழிப்பதே எங்கள் நோக்கம் என்று முழங்கிக் கொண்டு, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP), தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டங்களை அறிவித்து வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடனுதவி அளித்து நாட்டுப்புற ஏழை மக்களை முன்னேற்றி விட்டதாகப் பீற்றிக் கொண்டது காங்கிரசு கும்பல். ஆனால் வங்கிகள், கூட்டுறவு சங்கங்கள் மூலம் ஒரு சதவிதம் மட்டுமே கூலி விவசாயிகள் கடனுதவி பெற்றிருக்கிறார்கள். தமது தேவைகளுக்கு கந்துவட்டிக்காரர்களையே நம்பியிருக்கிறார்கள். அவர்களது கொடூரமான வட்டிச் சுரண்டலோ விவசாயிகளை மேலும் ஒட்டாண்டிகளாக்குகிறது. "எமர்ஜென்சி காலத்தில் வட்டிக் கடைக்காரர்களை இந்திரா காந்தி மிரட்டினார். கொஞ்ச காலத்திற்கு அவர்கள் அடங்கியிருந்தார்கள். அப்புறம் வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதையாகி விட்டது. நான் அடகு வைத்தே எனது உடமைகளையெல்லாம் இழந்து விட்டேன்" என்கிறார் ஒரு கூலி விவசாயி.

இப்படி கந்து வட்டிக்காரர்களாலும், நிலப் பிரபுக்களாலும் ஒட்டச் சுரண்டப்பட்டு ஏழை விவசாயிகள் நாளடைவில் கூலி விவசாயிகளாகின்றனர். ஏதுமற்ற கூலி விவசாயிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் உயர்ந்து கொண்டே போகிறது. அரசாங்கப் புள்ளி



படிப்பகம்

www.padippakam.com

விபரக் கணக்குப்படி 1881ல் நிலமற்ற கூலி விவசாயிகள் 77 லட்சம் பேர் இருந்தனர். 1921ல் இந்த எண்ணிக்கை 2 கோடியே 15 லட்சமாக உயர்ந்தது. 1931ல் 5 கோடியே 53 லட்சமாகியது. இன்று ஏறத்தாழ 7 கோடி மக்கள் நிலமற்ற கூலி விவசாயிகளாக இருப்பார்கள் என்று மதிப்பிடப்படுகிறது. இதில் விவசாய வேலை இல்லாத காலங்களில் நகரங்களுக்குப் பிழைக்க ஓடுவோர் தொகை சேர்க்கப்படவில்லை. இந்த மக்களையும் சேர்த்தால் கூலி விவசாயிகளின் எண்ணிக்கை மேலும் அதிகமாகும்.



ஒரு எந்திரத்துக்குக்கூட சரியான பராமரிப்பு இருந்தால்தான் இயங்கும். ஆனால் உயிருள்ள மனிதன், உழைக்கத் தயாராயிருந்தும் உண்ண உணவில்லை. காரணம் வேலையில்லை, ஏதோ ஒருநாள் வேலை கிடைத்தாலும் கூலியில்லை. சராசரி ஒருநாள் வருமானம் ஒரு ரூபாய்க்கும் குறைவாக இருந்தால் அவன் எதைச் சாப்பிட்டு அடுத்த நாள் வேலைக்குச் செல்ல முடியும். எண்ணிக்கூட பார்க்க முடியாத இந்த கொடூரமான நிலையில் கோடிக்கணக்கான கூலி ஏழை விவசாயிகள் செத்து மடிந்து கொண்டிருக்கின்றனர்.

இது சாதாரண காலங்களில் காணப்படும் நிலைமை. வறட்சி, வெள்ளம் போன்று இயற்கையினால் பாதிக்கப்படுகின்ற கால கட்டங்களில் கிராமங்களில் வாழும் மக்கள் அனைவருமே வறுமையின் கோரப் பிடியில் சிக்கி சிதைந்து போகின்றனர். பட்டினிச் சாவுகள் மிகச் சாதாரண விசயமாகிப் போகிறது.

மக்களின் பெயரால் அரியணை ஏறி உல்லாச வாழ்வு வாழும் ஊதாரிக் கூட்டத்தினர் அடுக்கடுக்காகத் திட்டங்களை அறிவிக்கின்றனர். ஆனால் அதற்கென ஒதுக்கும் பணத்தைக் கூட விழுங்கி ஏப்பம் விடுகின்றனர். நமது வரிப்பணத்தில், ஆயுத பேர ஊழல் போன்று பல வழிகளில் கோடிக்கணக்கான பணத்தைக் கொள்ளையிட்டது போக வறுமையைப் போக்க போட்ட திட்டத்திலும் கொள்ளையிடுகின்றனர்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் இப்படிப் போட்ட திட்டங்களின் லட்சணம் என்ன என்பதை திட்டக் கமிஷனின் கீழியங்கும் திட்ட மதிப்பீட்டுக் கழகம் வெளிச்சம் போட்டுக் காட்டியது. இக்கழகம் நாடு முழுவதும் 1163 கிராமங்களில் ஆய்வு நடத்தி 'எந்த மக்களுக்காக இந்த திட்டங்கள் போடப்பட்டதோ அந்த மக்களில் 15 சதவீதம் பேருக்குக்கூட இதன் பலன் கிட்டவில்லை' என அறிக்கை தந்தது. ஆனாலும் இன்றளவும் நடவடிக்கையில்லை.

வறுமையில், பட்டினியில் கூலி விவசாயிகள் செத்து மடியும்போதுதான், ஆட்சியாளர்கள் உலகை உல்லாசமாகச் சுற்றிவர நாளொன்றுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவழிக்கின்றனர். பாதுகாப்புக்கென பலகோடி ரூபாய்களை வீணடிக்கின்கின்றனர். இந்த ஓட்டுப் பொறுக்கிகளின், திமிர்பிடித்த அதிகாரிகளின் ஆடம்பரக் கேளிக்கூத்துகளுக்கு மக்களின் வரிப்பணம்தான் கோடிக்கணக்கில் நீராகச் செலவழிக்கப்படுகிறது.

இவர்களின் வாய்ச்சவாடாலுக்கு மட்டும் குறைச்சலில்லை. பசுமைப் புரட்சியின் மூலம் இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துவிட்டதாக மேடைதோறும் முழங்குகின்றனர். ஆனால் இந்த பசுமைப் புரட்சி திட்டத்தினால்தான் நாடே பாலைவனமாகி வருகின்றது என அதிர்ச்சியளிக்கும் ஆய்வுக் கட்டுரைகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

கூலி, ஏழை விவசாயிகள் இப்படி மௌனமாக படுகொலை செய்யப்பட்டு வருகின்ற வேளையில் ஓட்டுச் சீட்டு கம்யூனிஸ்டுகள் 'நிவாரணம் கொடு' என்று சவசவத்துப்போன பழைய போராட்ட வழிகளில் போர்க்குணமிக்க விவசாயிகளின் உணர்வை மழுங்கடித்து வருகின்றனர்.

ஒன்றுபட்ட கம்யூனிட் கட்சியின் தலைமையில் 1940ஆம் ஆண்டுகளில் நியாயமான கூலிக்காகப் போராடினர் கூலி விவசாயிகள். அந்தக் கூலி உயர்வுப் போராட்டம் அத்துடன் நின்று விடவில்லை. நிலப்பிரபுத்துவ அடக்குமுறைக் கொடூரங்களுக்கு எதிரான - சவுக்கடி, சாணிப்பாலை குடிக்க வைப்பது இன்னும்பல கொடுமைகள் — வீரஞ்செறிந்த வர்க்கப் போராட்டமாக வளர்ந்தது. 1950ஆம் ஆண்டுகளில் நடந்த இப்போராட்டங்கள்களப்பால் குப்பு, இரணியன் போன்ற பல வீரத்தியாகிகளைக் கண்டுள்ளது. இதன் வளர்ச்சியில் வெண்மணித் தியாகிகளின் தியாகமும் நமக்குத் தெரியும். ஆனால் இன்றோ குறைந்தபட்சம் கூலி உயர்வுக்கான போராட்டத்தைக் கூட நடத்தத் திராணியற்று நாற்காலிச் சீட்டுக்காக போலிக்கம்யூனிஸ்டுகள் நாயாய் அலைந்து கொண்டுள்ளனர்.

நாட்டிற்கே தூண் போன்று விளங்கும் கிராமங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. விவசாய உற்பத்தி பின்னுக்குத் தள்ளப்படுகின்றது. நாடே பாலைவனமாகிறது. கூலி விவசாயிகளின் வாழ்க்கையோ நரகமாக்கப் படுகிறது.

விவசாயிகள் வாழ்வா? சாவா? என்ற ஜீவமரணப் போராட்டத்தில் இருக்கிறார்கள். இவர்களுக்கு வாழ்க்கை என்றாலே போராட்டம் என்பதுதான் பொருள். செத்துக் கொண்டிருக்கும் கிழவனின் இறுதி மூச்சாகவே இவர்கள் வாழ்க்கை ஓட்டிக் கொண்டிருக்கிறது. இறுதி மூச்சு என்பது சுரண்டலுக்கானதாக மாறும்வரை இவர்களின் ஜீவமரணப் போராட்டம் ஓயப் போவதில்லை. நிலப்பிரபுத்துவ சுரண்டலை ஒழிப்பதற்கான போராட்டத்தில் விவசாயிகளுக்கு தலைமை ஏற்க போலிக்கம்யூனிஸ்டுகள் உட்பட யாரும் முன் வரப்போவதில்லை. இந்தக் கடமை, பொறுப்பு புரட்சியாளரின் தோளில் சுமத்தப் பட்டுள்ளது. விவசாயிகளுக்கான புதிய வாழ்க்கை, புரட்சியாளரின் தலைமையிலான தெலுங்கானா, நக்ஸல்பாரி போராட்டப் பாதையில் உழுபவனுக்கே நிலத்தை சொந்தமாக்கும் போதுதான் சாத்தியம்.

○ மணி

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ். மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600015. அச்சிடுபவர்: எம்.கே. சாமி, பிரேம்பிரஸ், [illegible], பெரியார் பாதை (மேற்கு) சென்னை—600094.

படிப்பகம்

www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா


அரசாங்க 'ரேஷன்' கடைகளில் கொடுக்கப்படும் சொற்ப அளவிலான மண்ணெண்ணை, அரிசி, 'பாமாயில்', சர்க்கரைக்கே பொது மக்கள் நீண்ட வரிசையில் நின்று நெரிசலில் சிக்கி திணற வேண்டியிருக்கும்போது, அதற்காக தேவைப்படும் 'ரேஷன்' அட்டையை ஆட்சி அதிகாரகும்பல் கேட்டவுடன் வாரி வழங்கி விடுமா என்ன? ரேஷன் அட்டை கோருவதற்காக கொடுக்கப்படும் விண்ணப்ப படிவங்களை வாங்குவதற்கு, சென்னை—சேத்துப்பட்டில் இருக்கும் நுகர்பொருள், உதவி கமிஷனர் அலுவலகத்தின் முன் அலை மோதும் மக்கள் கூட்டம் இது.

ரேஷன்கடை சென்றால், கொடுக்கும் சொற்ப அளவிலான அரிசி, மண்ணெண்ணை இருக்காது, மண்ணெண்ணை இருந்தால் 'பாமாயில்' இருக்காது.

இதோ, இங்கு அடுக்கி வைத்திருக்கும் மூட்டைகள், அரசு கையிருப்பில் வைத்திருக்கும் உணவு தானியங்கள். வறட்சியால் மக்கள் செத்தால் என்ன? இருந்தால் என்ன? அதைப்பற்றி கவலையில்லை ஆட்சி அதிகார கும்பலுக்கு! மக்களை பட்டினியால் மடிய விட்டுவிட்டு, உணவு தானியங்கள் கையிருப்பு பற்றி பீற்றிக் கொள்கிறது.

24 மில்லியன் டன் உணவு தானியங்களை கையிருப்பில் வைத்திருக்கும் அரசு கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் போக்குவரத்து, இடமாற்றத்தின்போது ஏற்பட்ட சேதாரம் என்று கணக்குகாட்டி 409 கோடி ரூபாய் மதிப்புக்கு 8.8 லட்சம் டன் உணவு தானியங்களை விழுங்கியிருக்கிறது. மேலும் கையிருப்பு வைப்பதற்கு கிடங்கு வசதி இல்லையென 5லட்சம் டன் கோதுமையை டன் ஒன்றுக்கு ரு 1,800க்கு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவிட்டது. அதை ஏற்றுமதி செய்வதற்காக அரசு ஒரு டன்னுக்கு செய்த போக்குவரத்து செலவு ரு. 400லிருந்து 500 ரூபாய். ஆக, ஒருடன் உணவு தானியத்தை வெறும் 800. ரூபாய்க்குதான் விற்றுள்ளது என்று அர்த்தம். அதாவது ஒருகிலோ கோதுமையின் விலை 80 பைசா. இது மட்டுமல்ல, கையிருப்பில் இருக்கும் ஒவ்வொரு டன் உணவு தானியத்தையும் ஒரு ஆண்டு பராமரிக்க அரசு செய்யும் செலவு 800 ரூபாய். இரண்டு ஆண்டுக்கு மேல் கையிருப்பில் இருக்கும் உணவு தானியங்கள், அதன் மதிப்பைவிட அதிகமாகபராமரிப்பு செலவாக விழுங்கியிருக்கின்றன.

மக்கள், அரைவயிறு கஞ்சிக்கு கூட தேவையான உணவு தானியங்கள் வாங்கமுடியாத அளவு அவர்களை ஓட்டாண்டி ஆக்கி சுரண்டுவது ஒருபுறம். அவர்களின் ரத்தத்தில் விளைந்த உணவு தானியங்களை சேமித்து வைப்பது என்ற பெயரில் அதிலும் அதிகார முறைகேடுகள் மூலம் கொள்ளையிடுவது மறுபுறம். இப்படி உழைக்கும் மக்களின் ரத்தத்தை அட்டையாக உறிஞ்சி வாழும் இந்த ஒட்டுண்ணி ஆட்சி அதிகார கும்பலை வெட்டிச் சாய்ப்பது எப்போது?



படிப்பகம்